ஹிந்து தர்ம ஞானம்

ஓர் எளிய அறிமுகம்

அஞ்சல்வழி ஓராண்டுச் சான்றிதழ் படிப்பு

4

ஞானத்திற்கு ஈடு ஞாலத்தில் இல்லை

பாரதீய அறநெறிப் பண்பாட்டுக் கல்வி மையம்

திருவண்ணாமலை.

தாய் அமைப்பு :

தர்ம ரக்ஷண ஸமிதி

தமிழ்நாடு





நற்பண்புகளும், நல்லொழுக்கமும் இருக்கும்போது,
ஞானம் இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம்,
நற்பண்புகளும், நல்லொழுக்கமும் இல்லாவிடிலோ
ஞானத்தை அடையவே முடியாது.
நற்பண்புகளும், நல்லொழுக்கமும் இருந்தால்,
ஞானத்தை அடையலாம்.
" ஞானத்திற்கு ஈடு ஞாலத்தில் இல்லை "

பூஜ்ய ஸ்ரீ ஸ்வாமி தயானந்த ஸரஸ்வதி

ஹிந்துவே ! எழுந்திரு, உன் சமயத்தைப் புரிந்து கொள்.
உன்னுடைய பெருமையை வெளிப்படுத்து.

'சாஸ்த்ரம்' என்ற சொல்லுக்கே,
நன்மையை உபதேசித்து, துன்பத்திலிருந்து நம்மைக் காப்பாற்றுவது என்று தான் பொருள். சாஸ்த்ரங்கள் கண்ணாடியைப் போன்று நம்மையே நமக்குக் காட்டும் ஆற்றல் படைத்தவை. பிறவித் தளைகளிலிருந்து விடுபட்டு, மனிதன் பேரானந்தத்தை உணரும் வழியை சாஸ்த்ரங்கள் தான் நமக்கு உணர்த்துகின்றன.

இதற்காக உருவாக்கப் பெற்றதுதான்
'ஹிந்து தர்ம ஞானம்' அஞ்சல் வழிக் கல்வி.

மெய்யன்புடையீர் ! படிப்பீர் ! பயன்பெறுவீர் !
உளங் கனிந்த நல்வாழ்த்துக்கள்.
ஆதி குருவின் அருட்பணியில்,

பூஜ்ய ஸ்ரீ ஸ்வாமி ஓங்காராநந்த
தலைவர், தர்ம ரக்ஷண ஸமிதி

SU PALANEEAPPAN

ௐ

ஹிந்து தர்ம ஞானம்

அஞ்சல் வழிக் கல்வி

ஓராண்டுச் சான்றிதழ் படிப்பு

பாடப் புத்தகம்

தொகுப்பு

4

ஆடி

பாரதீய அறநெறிப் பண்பாட்டுக் கல்வி மையம்
திருவண்ணாமலை


தாய் அமைப்பு

தர்ம ரக்ஷண ஸமிதி
தமிழ் நாடு

வெளியீடு : பாரதீய அறநெறிப் பண்பாட்டுக் கல்வி மையம்
சுத்தானந்த ஆஸ்ரமம்,
36, கிரிவலப் பாதை,
அடிஅண்ணாமலை,
திருவண்ணாமலை - 606 604.
தொலைபேசி: 04175-232 153
செல்லிடைப்பேசி: 9500082794
மின்னஞ்சல்: cbdcstn@gmail.com

முதல் பதிப்பு	: விஜய வருடம் (2013-14)	- 2,000 பிரதிகள்
இரண்டாம் பதிப்பு	: ஜய வருடம் (2014-2015)	- 1,600 பிரதிகள்
மூன்றாம் பதிப்பு	: மன்மத வருடம் (2015-2016)	- 1,000 பிரதிகள்
நான்காம் பதிப்பு	: துர்முகி வருடம் (2016-2017)	- 2,300 பிரதிகள்
ஐந்தாம் பதிப்பு	: ஹேவிளம்பி வருடம் (2017-2018)	- 1,000 பிரதிகள்
ஆறாம் பதிப்பு	: விளம்பி வருடம் (2018-2019)	- 600 பிரதிகள்
ஏழாம் பதிப்பு	: விகாரி வருடம் (2019-2020)	- 500 பிரதிகள்
எட்டாம் பதிப்பு	: சார்வரி வருடம் (2020-2021)	- 300 பிரதிகள்

அச்சிட்டோர் : LKM Computer Printers, Chennai - 17
Phone : 9940682929



பூஜ்ய ஸ்ரீ ஸ்வாமி தயானந்த ஸரஸ்வதி

ௐ

அருளாசி

ஹிந்து தர்மம் என்பது வாழ்க்கையின் குறிக்கோளையும் அதை அடைய வேண்டிய வழியையும் கொண்டது; உண்மையை அடிப்படையாகக் கொண்டது; இந்த அஞ்சல்வழிக் கல்வித் திட்டத்தை வரவேற்று ஆசீர்வதிக்கிறேன். ஹிந்துக்கள் எல்லோரும் இந்தத் திட்டத்தில் இணைந்து ஹிந்துக்களாக இருக்கவேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

ஸ்வாமி தயாநந்த ஸரஸ்வதி
நிறுவனர்
தர்ம ரக்ஷண ஸமிதி

"ஞானத்திற்கு ஈடு ஞாலத்தில் இல்லை"
"ந ஹி ஜ்ஞாநேந ஸத்ருஶம் பவித்ரம் இஹ வித்யதே"

ஓம்
ஸ்ரீகுருப்யோ நம:

அருள் வாழ்த்துரை



ஹிந்து தர்ம ஞானப் பயிற்சித் திட்டத்தில் ஹிந்துக்கள் அவசியம் கலந்துகொள்ள வேண்டுமென்று ''சேரவாரும் செகத்தீரே'' என்ற தாயுமானவரின் அருள்மொழியினைச் சிந்தித்து அன்போடு அனைவரையும் அழைக்கின்றேன்.

இதன் வாயிலாக ஹிந்து தர்ம விஷயங்களை நன்கு அறிந்துகொள்வோம். ஆர்வத்துடன் அவைகளைக் கடைப்பிடிப்போம். அனைவரையும் இதில் ஈடுபடுத்தி நாம் பெற்ற இன்பத்தைப் பிறருக்கும் வழங்குவோம்.

காலத்தை வென்று வாழ்ந்துகொண்டிருக்கின்ற ஹிந்து தர்மத்தை எல்லாவிதமான நல்ல முயற்சிகளின் துணைகொண்டு பாதுகாப்போம். உண்மையான மனிதநேயத்தை உலகுக்கு உணர்த்துவதே ஹிந்துமதம் என்பதை நிரூபிப்போம். தெய்வீகமான இந்த பாரதநாட்டை ஹிந்து தர்மத்தின் வாயிலாகப் பாதுகாக்க உறுதி பூணுவோம்.

ஊதுமினோ வெற்றி! ஒலிமினோ வாழ்த்தொலிகள்
ஓதுமினோ வேதங்கள்! ஓங்குமினோ! ஓங்குமினோ!
தீதுசிறி தும்பயிலாச் செம்மணிமா நெறிகண்டோம்;
வேதனைகள் இனிவேண்டா, விடுதலையோ திண்ணமே.

-பாரதியார்

ஸ்வாமி ஓங்காரானந்த

தலைவர், தர்மரக்ஷண ஸமிதி.

ௐ

ஹிந்து தர்ம ஞானம்

பொருளடக்கம்

ௐ

பிரார்த்தனைப் பாடல்கள்

1. கு^{3}ரு த்^{4}யாநம்
(குருவை தியானித்தல்)



சித்ரம் வடதரோர்மூலே வ்ருத்^{3}தா^{4}ஶ்ஶிஷ்யா கு^{3}ருர்யுவா|
கு^{3}ரோஸ்து மௌநம் வ்யாக்^{2}யாநம் ஶிஷ்யாஸ்து சி^{2}ந்நஸம்ஶயா: ||

பதவுரை:

சித்ரம்	-	(உண்மையில்) இது ஒரு அதிசயம்
வடதரோ	-	ஆலமரத்தின்
மூலே	-	அடியில்
கு^{3}ரு:	-	குரு
யுவா	-	இளைஞர்
வ்ருத்^{3}தா^{4}:	-	மூப்படைந்தவர்கள்
ஶிஷ்யா:	-	சிஷ்யர்கள்
து	-	உண்மையில்
கு^{3}ரோ:	-	குருவின்
வ்யாக்^{2}யாநம்	-	விளக்கம்
மௌநம்	-	பேசாமை
ஶிஷ்யா:	-	சிஷ்யர்கள்
து	-	ஆயினும்
சி^{2}ந்நஸம்ஶயா:	-	விலகிய ஐயமுடையவர்கள்

பொருள்: உண்மையில் இது ஓர் அதிசயம்! ஆலமரத்தின் அடியில் இளமையான குருவும், அவரைச் சூழ்ந்து வயதான சிஷ்யர்களும் இருக்கிறார்கள். குருவின் விளக்கமோ என்னவெனில் மௌனம் (பேசாமை); ஆயினும் சிஷ்யர்களின் ஸந்தேகங்கள் நீங்கிவிட்டன.

சிவபெருமான்

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியில் பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இம் மாநிலத்தே

- திருநாவுக்கரசர் (தேவாரம்)

பொருள்: நடராஜப் பெருமானாக விளங்கும் திருக்கோலத்தில் இறைவனுடைய வளைந்த புருவத்தையும் கொவ்வைக் கனிபோல் சிவந்த வாயில் விளங்கும் மெல்லிய புன்முறுவலையும், பனித்த சடையும் பவளம் போன்ற செம்மேனியில் பால் போலும் திருநீறு வெண்மையாகப் பொலிந்து விளங்குவதையும், இனிமை தருகின்ற தூக்கிய திருவடிகளையும் காணும்பேறு இறையருளால் கிடைப்பதால் இந்த உலகத்தில் மனிதனாகப் பிறப்பதும் வேண்டத்தக்கதே ஆகும்.

2. ஸ்ரீ மஹாவிஷ்ணு

நமஸ்ஸமஸ்த பூ⁴தாநாம் ஆதி³பூ⁴தாய பூ⁴ப்⁴ருதே |
அநேகரூபரூபாய விஷ்ணவே ப்ரப⁴ விஷ்ணவே ||

பதவுரை:

ஸமஸ்த பூ^{4}தாநாம்	- எல்லா உயிரினங்களின்
ஆதி^{3}பூ^{4}தாய	- காரணமானவருக்கு
பூ^{4}ப்^{4}ருதே	- உலகத்தைக் காப்பவருக்கு
அநேக ரூப ரூபாய	- அனைத்து வடிவங்களாய் இருப்பவருக்கு
விஷ்ணவே	- எங்கும் நிறைந்திருப்பவருக்கு
ப்ரப^4 விஷ்ணவே	- ஸ்வயமாக ப்ரகாசிப்பவருக்கு
நம:	- நமஸ்காரம்

பொருள்:

எல்லா உயிரினங்களின் படைப்பிற்குக் காரணமாய் விளங்குபவராயும், படைத்த உலகைக் காத்தருள் பவராகவும், அனைத்து வடிவங்களாய் இருப்பவராகவும், எங்கும் நீக்கமற நிறைந்திருப்பவராகவும் ஸ்வயமாக ப்ரகாசிப்பவராகவும் விளங்கும் ஸ்ரீமஹாவிஷ்ணுவிற்கு என் நமஸ்காரம்.

மஹாவிஷ்ணு படைப்பின் காத்தலுக்குரிய கடவுளாதலால் வளமைக்கும் ஆரோக்கியத்திற்கும் அவர் வழிபடப்படுகிறார்.

திருமால்

குலம்தரும் செல்வம் தந்திடும் அடியார் படுதுயராயின எல்லாம்
நிலந்தரஞ் செய்யும் நீள்விசும்பு அருளும் அருளொடுபெருநிலமளிக்கும்
வலந்தரும் மற்றும் தந்திடும் பெற்றதாயினும் ஆயின செய்யும்
நலந்தருஞ் சொல்லை நான் கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்.

- திருமங்கையாழ்வார் (நாலாயிர திவ்யப் ப்ரபந்தம்)

பொருள்:

'நாராயணா' என்னும் திருநாமத்தைச் சொன்னால் நல்ல குலப்பிறப்பும், செல்வமும் தரும்; அடியவர்கள் படுகின்ற துன்பங்களை எல்லாம் நீக்கும்; வைகுண்டப் பதவியைத் தரும்; அருளையும் வழங்கும்; உலகத் தலைமையையும் தரும்; எல்லாச் செயல்களிலும் வெற்றியைத் தரும்; ஈன்ற தாயினைக் காட்டிலும் வேண்டுவன எல்லாம் செய்யும்; இத்தனை நன்மையைத் தரும் **'நாராயணா'** என்னும் நாமத்தை நான் கண்டுகொண்டேன்.

3. அம்பாள்

நமஸ்தே ஶாரதே[3] தே[3]வி காஶ்மீரபுரவாஸிநி |
த்வாமஹம் ப்ரார்த[2]யே நித்யம் வித்[3]யாதா[3]நம் ச தே[3]ஹி மே ||

பதவுரை:

காஶ்மீரபுரவாஸிநி	- காஷ்மீரத்தில் வசிப்பவளே
ஶாரதே[3]	- ஸரஸ்வதியே
தே[3]வி	- தே[3]வியே (ஒளிமயமானவளே)
தே	- உனக்கு
நம:	- நமஸ்காரம்
ச	- மேலும்
மே	- எனக்கு
வித்[3]யாதா[3]நம்	- அறிவுக்கொடையை
தே[3]ஹி	- அளிப்பாயாக
அஹம்	- நான்
த்வாம்	- உன்னை
நித்யம்	- எப்போதும்
ப்ரார்த[2]யே	- ப்ரார்த்திக்கிறேன்

கருத்துரை:

காஷ்மீரத்தில் வசிப்பவளே! ஸரஸ்வதியே! உன்னை நமஸ்கரிக்கிறேன். நீ எனக்கு அறிவுச் செல்வத்தைத் தந்தருள்வாயாக! உன்னை எப்போதும் நான் ப்ரார்த்திக்கிறேன்.

அபிராமி

பூத்தவளே புவனம் பதிநான்கையும் பூத்தவண்ணம்
காத்தவளே பின்கரந்தவளே கறைகண்டனுக்கு
மூத்தவளே என்றும் மூவாமுகுந்தற்கு இளையவளே
மாத்தவளே உன்னை யன்றி மற்றோர் தெய்வம் வந்திப்பதே

- அபிராமிபட்டர் (அபிராமி அந்தாதி)

பொருள்: பதினான்கு உலகங்களையும் தோற்றுவித்தவளே, அவ்வுலகங்கள் அனைத்தையும் தொடர்ந்து காத்து வருபவளே, முடிவில் அழித்து அருள்பவளே, திருநீலகண்டனாகிய சிவபெருமானுக்குத் தத்துவமுறையில் மூத்தவளாகச் சொல்லப்படுபவளே, திருமாலுக்கு இளைய தங்கையே, பெரிய தவ வல்லமை பெற்றவளே உன்னைத் தவிர்த்து வேறு தெய்வத்தை அடியேன் வணங்கமாட்டேன். நீயே எனக்கு முழுமுதல் தெய்வமாவாய்!



1. அன்னை பூமி பாரதம்
(மாத்ருத்வம்)

பாரதீயர்களாகிய நமக்கு எந்தப் பகுதியில் வாழ்ந்தாலும் எந்தக் காலகட்டத்தில் வாழ்ந்தாலும் வாழ்க்கையின் லக்ஷியம் ஒன்றேயாக இருந்து வந்திருக்கிறது.

பொதுவான அந்த லக்ஷியம் எது?

வாழ்வில் அனைவருக்கும் பொது லக்ஷியமாய் விளங்கி வந்திருப்பது **'கடவுளை அடைவதே'** ஆகும்.

'வாழ்வின் முடிவாய் விளங்குவது இங்கு
இறைவன் திருவடி நீழலே'

தெய்வப் புலவர் திருவள்ளுவரின் வாக்கும் இதைத்தான் வலியுறுத்துகிறது.

'வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை; மற்றது
வேண்டாமை வேண்ட வரும்

அவா அறுத்தல் (362)

பொருள்: ஒருவன் ஏதாவது ஒன்றை விரும்புவதானால் பிறவாமையை விரும்ப வேண்டும், அது ஆசையற்ற நிலையை (விரும்பாமை) விரும்பினால்தான் உண்டாகும்.

மோக்ஷமே குறிக்கோள்; முக்தியே லக்ஷியம்; பிறப்பு இறப்பு என்ற சுழற்சியிலிருந்து விடுபடுவதே ஜீவனின் லக்ஷியம். இது நம் நாட்டினர் மட்டுமே பொதுவாகக் கொண்டுள்ளதாகும். மற்ற எந்த நாட்டினரும் இந்தக் கருத்தை ஏற்றுக் கொள்வதில்லை. ஆனால் பாரத தேசத்தவர்களாகிய நம்மவர்கள் வடக்கே ஹிமயமலையில்

வாழ்ந்தாலும் சரி குமரி முனையில் வாழ்ந்தாலும் சரி இந்த லக்ஷியத்தைப் பொதுவாகக் கொண்டுள்ளதால் நாம் ஒரே நாட்டைச் சேர்ந்தவர் என்பது தெளிவாகிறது.

இந்த இறைவனை அடைய வேண்டும் என்ற லக்ஷியத்தை தம் வாழ்வில் அடைந்த மஹான்கள் வடக்கேயும் தெற்கேயும் ஒருசேரப் போற்றப்படுகிறார்கள்; வழிபடப் படுகிறார்கள்.

வஸிஷ்டர், வால்மீகி, அகஸ்தியர், திருவள்ளுவர், விஸ்வாமித்ரர், பரத்வாஜர், கௌதமர் முதலிய மஹரிஷிகள் எல்லா மக்களாலும் வணங்கப்படுகிறார்கள்.

இதிஹாஸ புராணங்களில் காணப்படும் மஹான்கள் மட்டுமின்றி - ராமானந்தர், திருநாவுக்கரசர், நம்மாழ்வார், கபீர்தாஸர், துளஸிதாஸர், நாமதேவர், துக்காராம், ராமதாஸர், புரந்தர தாஸர் போன்ற பக்தி இயக்கம் பரவிய காலகட்டத்தில் வாழ்ந்த ஸித்த புருஷர்களும் போற்றப்பட்டு வருகின்றனர்.

அண்மைக் காலத்திலும் மா ஆனந்தமயி, பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர், திருவருட் ப்ரகாச வள்ளலார், ஸ்ரீ ராமதீர்த்தர், ஸ்வாமி சிவானந்தர், பகவான் ஸ்ரீ ரமணர் போன்ற மஹான்கள் உலகத்தவர்களால் போற்றப்பட்டும் பூஜிக்கப்பட்டும் வருகின்றனர்.

இதுபோன்ற கடவுளையுணர்ந்த அநுபவித்த ஞானிகள் நம் நாட்டில் மட்டுமே காணக் கிடைக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது.

(மறுபிறவிக் கொள்கை, வினைப்பயனில் நம்பிக்கை என்ற இரண்டு தத்துவங்களில் ஸநாதந தர்மத்தின் அடிப்படை அமைந்திருக்கின்றது.)

1. மறுபிறவிக் கொள்கை

இறைவனை அடைகின்ற லக்ஷியத்தை அடைவதில் ஒரு பிறவியில் இல்லாமல் போனாலும் பல பிறவிகள் எடுத்தாவது ஜீவன் இந்த லக்ஷியத்தை அடையும் என்பது நம் நாட்டவர் அனைவருக்கும் பொதுவான நம்பிக்கை.

திருவள்ளுவரின் தெய்வக் குறட்பாக்கள் இதனைத் தெளிவாகக் குறிப்பிடுகின்றன.

எழு பிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கள் பெறின். (மக்கட் பேறு -62)

எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கள்
விழுமம் துடைத்தவர் நட்பு (செய்ந்நன்றி யறிதல் -107)

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து (கல்வி-398)

ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்பு உடைத்து (அடக்கமுடைமை-126)

இன்னும் எத்தனையோ சான்றுகளை மறுபிறப்புக் கொள்கைக்காகக் காட்டலாம். விரிவு அஞ்சி இத்துடன் நிறுத்திக் கொள்கிறோம்.

2. வினைப்பயனில் நம்பிக்கை

பாரதத்துள் உதித்த அனைத்து மதங்களும் மறுபிறவியிலும் அதற்குக் காரணமான பூர்வ ஜன்ம (முற்பிறவி) வினைப்பயனிலும் நம்பிக்கை கொண்டுள்ளன.

பாரத தேசம் ***கர்ம பூமி*** என அழைக்கப்படுவதே இந்த வினைப்பயன்களைத் துய்க்கவும் வினைகளை நீக்கி வீடுபேறு பெற நல்வினைகளை ஆற்றவும் தான். இந்தப் புனித பூமியே ஏற்றக் களம் என அனைவராலும் கருதப்படுவதன் காரணமாகவே **'பாரத தேசமே, ஒரு ஜீவன் தன் வாழ்க்கையின் லக்ஷியத்தை அடைவதற்கு இறுதியாக வந்துசேரவேண்டிய இடம்'** என **ஸ்வாமி விவேகானந்தர்** மொழிகின்றார்.

நால்வகை உறுதிப் பொருள்கள்
(சதுர்வித புருஷார்த்தங்கள்)

வாழ்க்கை நெறிமுறையும் அனைவருக்கும் பொதுவானதாகவே அமைந்து உள்ளது. அறம் (தர்மம்) பொருள் (அர்த்தம்) இன்பம் (காமம்) வீடு (மோக்ஷம்) என்ற இந்த நான்கின் அடிப்படையிலேயே மனித வாழ்வின் தேடல்கள் அமைந்துள்ளன. வாழ்வில் இந்த நான்கு அம்சங்களே வழிகாட்டி வந்துள்ளன.

நம் நாடு முழுவதற்கும் வாழ்வின் அடிப்படையாகத் தர்மமும் தர்மத்தின் ஆதாரத்தில் பொருள் ஈட்டலும், ஈட்டிய பொருள் மூலம் தர்மத்திற்கு இயைந்த இன்பங்களைத் துய்ப்பதும் இறுதியில் நிறைவான வாழ்வின் முடிவாக வீடு பேற்றை அடைவதும் பொதுவான லக்ஷியமாக அமைந்துள்ளது.

இதனால்தான் வாழ்க்கை மூல்யங்களான தர்ம, அர்த்த, காம, மோக்ஷம் என்ற சதுர்வித புருஷார்த்தங்கள் நாடு முழுவதற்கும் பொதுவானதாக இருந்து வந்துள்ளன.

எனவேதான் தமிழ் இலக்கியங்களிலும் காப்பியத்தை **பெருங்காப்பியம், சிறுகாப்பியம்** என்று பாகுபடுத்தும் போது புருஷார்த்தங்கள் (அறம், பொருள், இன்பம், வீடு) நான்கையும் கூறுவது **பெருங்காப்பியம்** என்றும், இவற்றில் ஏதேனும் ஒன்று குறைந்தாலும் அது **சிறுகாப்பியம்** என்றும் வகைப்படுத்தினர்.

நாம் அறத்தையே (தர்மம்) நம் வாழ்வின் மையமாகக் கொண்டிருந்தோம். நம் முன்னோர்கள் அறத்தின் வழியிலேயே தங்கள் வாழ்க்கையைச் செவ்வனே வாழ்ந்தனர். நம் நாடும் அத்தகைய அறவோர்கள் வரலாற்றையே காவியங்களாக்கிப் போற்றிப் பாடி வந்துள்ளது.

த்யாக சிந்தனை வந்து லோகோபகாரமாகவே நிஷ்காம்ய கர்மா ஒருத்தன் பண்ண ஆரம்பித்து விட்டால் அப்புறம் அவனிடம் எல்லா ஆத்ம ஸம்பத்துக்களும் ஒன்று பாக்கியில்லாமல் வந்துவிடும். ''த்யாகத்தினாலே பல பேர் அம்ருதத்தை அடைந்திருக்கிறார்கள்'' என்று ச்ருதியே சொல்கிறது.

புத்திசாலித்தனம், நிறைய விஷயம் தெரிந்து கொண்டிருப்பது, அதை எடுத்துச் சொல்லிப் புரியவைக்கிற ஸாமர்த்யம் எல்லாம் மூளையின் கார்யங்கள். மற்ற தேசங்களைப் போல் இந்த மூளைச் சிறப்போடு மட்டும் நம்தேச ஆசார்யர்கள் நின்றுவிட வில்லை. அவன் வாழ்க்கையில் பரிசுத்தனாயிருக்க வேண்டும்.

2.எங்கள் தந்தையர் நாடு
(பிதுரார்ஜிதம்)

ஸ்ரீ வேத வ்யாஸர்

ஆஷாட மாதம் (ஆனி-ஆடி) வ்யாஸரைப் போற்றும் வகையில் பௌர்ணமியன்று **வ்யாஸ பூஜை** அதாவது **குருபூஜை** தினமாகக் கொண்டாடப்படுகிறது.

ஒவ்வொரு மன்வந்தரங்களிலும் பகவான் விஷ்ணு வ்யாஸராக அவதரித்து வேதங்களை உயர்த்துவதாக நம் ரிஷிகள் மொழிந்துள்ளனர். இதுவரை 28 மன்வந்தரங்களிலும் வ்யாஸ அவதாரங்கள் நிகழ்ந்துள்ளன. நடைமுறையிலுள்ள வைவஸ்வத மன்வந்தரத்தில் க்ருஷ்ண த்வைபாயனர் வ்யாஸராக அவதரித்துள்ளார்.

வ்யாஸம் வஸிஷ்ட[2] நப்தாரம் ஶக்தே: பௌத்ர மகல்மஷம் |
பராஶராத்மஜம் வந்தே[3] ஶுகதாதம் தபோநிதி[4]ம் ||

வ்யாஸாய விஷ்ணுரூபாய வ்யாஸரூபாய விஷ்ணவே |
நமோ வை ப்[3]ரஹ்மநித[4]யே வாஸிஷ்டா[2]ய நமோ நம: ||

பொருள்: வஸிஷ்டருடைய கொள்ளுப்பேரரும் சக்தியின் பேரரும் பராசரருடைய புத்திரரும் சுகருடைய தகப்பனாரும் மாசற்ற தபோதனருமாகிய வ்யாஸரை வணங்குகிறேன்.

விஷ்ணுவடிவுள்ள வ்யாஸராகவும் வ்யாஸர் வடிவங் கொண்ட விஷ்ணுவாகவும் வேதத்தின் பொக்கிஷமாகவும் உள்ள வ்யாஸருக்கு நமஸ்காரம். வஸிஷ்டர் குலத்துதித்த அவருக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரம்.

ஸநாதநமான அநாதியான வேதங்களைத் தொகுத்து கலியுகத்தின் நலனைக் கருத்தில் கொண்டு நான்காக விபாகம் (ருக், யஜுர், ஸாம, அதர்வ) செய்து முறையே நான்கு சீடர்களுக்கு (பைலர், வைஶம்பாயனர், ஜைமினி, ஸுமந்து) எனக் கொடுத்தவர் க்ருஷ்ண த்வைபாயனர் ஆவார். வேதங்களை வகுத்துக் கொடுத்ததினால் **'வேத வ்யாஸர்'** என்று அழைக்கப் பெறுகிறார். **'பாதராயணர்'** என்ற பெயரும் இவருக்குண்டு.

ஐந்தாவது வேதமான, இதிஹாஸங்கள் இரண்டனுள் ஒன்றான **மஹாபாரதம்** வ்யாஸர் பெருமான் சொல்ல விநாயகர் எழுத நமக்குக் கிடைக்கப்பெற்றது.

பதினெண் புராணங்களையும், பதினெண் உப புராணங்களையும் நமக்களித்தவர் வியாஸர்.

அதில் பாரதீய கலாச்சாரத்தை அழகிய கதைகள் கிளைக்கதைகள் மூலம் எடுத்துரைத்துள்ளார்.

வேதங்களின் உட்கருத்தை நாம் புரிந்துகொள்வதற் கென்று **'ப்ரும்மஸூத்ரம்'** என்ற க்ரந்தத்தை நமக்கருளியவர் வ்யாஸர்.

நாரதரின் கட்டளைப்படி பக்திச் சுவை நிறைந்த **ஸ்ரீமத் பாகவதம்** என்ற நூலை நமக்கு அளித்தார்.

வேத ஸாரமான **பகவத்கீதை** அவர் இயற்றிய மஹாபாரதத்தில் இடம் பெற்றுள்ளது. ஸஞ்சயனுக்கு ஞானக்கண் அருளியவர் வியாஸர் பெருமானே. அதனால் ஸஞ்சயன் போர்க்களத்தில் நடக்கும் காட்சிகளை திருதராஷ்டிரனுக்கு சொல்ல முடிந்தது.

''வியாஸர் நான்கு முகம் இல்லாத ப்ரஹ்மா (பிரம்மன்); நான்கு கைகள் இல்லாத விஷ்ணு; நெற்றிக்கண் இல்லாத சிவன்''

என்று சிறப்பித்துப் போற்றப்படுகிறார்.

பராசர மஹர்ஷிக்கும் ஸத்யவதிக்கும் பிறந்தவர்தான் க்ருஷ்ண த்வைபாயனர். கறுப்பு நிறமுடையவராதலாலும், ஒரு தீவிலே (த்வீபம்) பிறந்தவராதலாலும் **க்ருஷ்ண த்வைபாயனர்** என்ற பெயரால் அழைக்கப் பெற்றார்.

வஸிஷ்டர் முதல் வ்யாஸர் வரை:

வஸிஷ்டர் ப்ரஹ்மாவின் பத்து மானஸ புத்ரர்களில் ஒருவர். ஏராளமான வேத ஸூக்தங்களுக்கு ரிஷி; ஸப்தரிஷிகளில் ஒருவராயிருக்கும் பெருமையும் இவருக்கு உண்டு. இன்னொரு பெருமை பதிவ்ரதைகளில் முதல் ஸ்தானம் கொடுத்துப் பூஜிக்கப்படும் அருந்ததியின் பதியும் இவரே. எல்லாவற்றிற்கும் மேலாக, அவருடைய பரம குருவான நாராயண மூர்த்தியே ஸ்ரீராமசந்த்ர மூர்த்தியாக அவதாரம் செய்தபோது இவர் அவருக்கு குருவாகி உபதேசம் செய்திருக்கிறார். அப்போது அவர் உபதேசித்ததுதான் **'ஞான வாஸிஷ்டம்'**.

வஸிஷ்டருடைய மகன் தான் அடுத்தவராக வரும் **'சக்தி'**.

சக்தியின் புத்ரர் **பராசரர்.** இவர் தாயாரின் கர்ப்பத்திலிருந்தபோது வேதங்களைச் சொன்னவர்; இவர் லோகத்திற்கு இரண்டு பெரிய ஸொத்துக்களைத் தந்தவர்

ஆவார். ஒன்று **வேதவ்யாஸ பகவான்.** மற்றது **விஷ்ணுபுராணம்.** ஸ்ரீமத் பாகவதத்திற்கே மூல நூல்போல் இருப்பது **விஷ்ணுபுராணம்.** **'பராசர ஸ்ம்ருதி'** என்று வழங்கப்படுகிற தர்ம சாஸ்திர நூல் இவரால் அருளிச் செய்யப்பட்டதே.

பராசரருக்கு அடுத்தபடியாக வந்தவர்தான் அவர் மைந்தர் **வ்யாஸாசார்யாள்** என்கிற வேத வ்யாஸ பகவான்.

குரு என்பவர்தான் நமக்கு நேரிடையாக உபதேசிப்பவர். அந்த குருவின் குரு பரமகுரு. பரமகுருவின் குரு பரமேஷ்டி குரு. பரமேஷ்டி குருவின் குரு பராபர குரு. அதற்கு முற்பட்டவர்களை பூர்வாசார்யார்கள் என்று மொத்தமாகச் சொல்லிவிடுவது வழக்கம்.

'ஹிந்து' என்று இன்று பெருமையுடன் நாம் சொல்லிக்கொள்வதற்குக் காரண கர்த்தா தான் வேத வ்யாஸர்.

ஸ்ரீ வேதவ்யாஸ மஹர்ஷியை கொண்டாடவேண்டியது ஒவ்வொரு ஹிந்துவின் கடமை. ஆஷாட பூர்ணிமா அன்று கொண்டாடுகிற வ்யாஸ பூஜை (ஜயந்தி) தான் ஸ்ரீ குருபூஜை.

ஒருத்தன் மாத்ரு பக்தியால் இந்த லோகத்தையும், பித்ரு பக்தியால் அந்தரிக்ஷ லோகத்தையும் ஆசார்ய பக்தியால் ப்ரஹ்ம லோகத்தையும் அடைகிறான்.

- மனுதர்ம சாஸ்திரம்

சாதுர்மாஸ்ய விரதம்:

'சாதுர் மாஸ்யம்' என்பது ஆஷாட மாதம் சுக்ல பக்ஷ த்வாதசி முதல் கார்த்திகை மாதம் ஏகாதசி வரையில் கட்டுப்பாடுகளுடன் இருப்பதே ஆகும்.

ஒரு ஜீவனுக்கும் துன்பம் தரக்கூடாது என்னும் உயர்ந்த நோக்கோடு ஆடி மாதம் துவங்கி நான்கு மாதம் / பக்ஷம் ஒரே இடத்திலேயே ஸந்யாஸிகள் தங்கி இருப்பது தான் சாதுர்மாஸ்ய வ்ரதம்.

மாணவனை (அ) சிஷ்யனை

1. சொல்லிக் கொடுத்துத் திருத்துவது.

2. அருள் சக்தியால் திருத்துவது.

3. மந்த்ர சக்தியால் வேத ஸம்ஸ்காரம் கொண்டு சுத்தி செய்து, தத்த்வாரா (அதன் வழியே) திருத்துவது என்று மூன்று தினுஸு.

பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்று ரொம்பவும் பெரியவரான திருவள்ளுவரே சொல்லிவிட்டார். அப்பேர்ப்பட்ட பொருளைப் பொருட்டாக நினைக்காமல், '**வித்யை வளரணும்** என்பதற்காகவே பாடம் சொல்லிக்கொடு' என்று விதி செய்து த்யாக சிந்தையிலே வளரச் செய்த பரம்பரையே ஆசார்யப் பரம்பரை.

3. ஹிந்து ஞானக் களஞ்சியம்

(குருவாசகம்)

வேதங்கள் ஓர் அறிவுத் தொகுதி என்பதும், பரம்பொருளின் மூச்சுக் காற்றே வேதம் என்பதும் நாம் தெரிந்து கொள்ள வேண்டியதாகும். நம் இஹபர (இம்மை, மறுமை) நலனைக் கருத்தில் கொண்டு எல்லாம் வல்ல கருணையே வடிவான பரம்பொருள் ரிஷிகளுக்கு வெளிப்படுத்தியது தான் வேதம். (பாதுகாப்பாக வைத்திருப்பதற்காகவும், அவற்றை அறிந்து க்ரஹித்துக் கொள்வதற்காகவும் வேதங்கள் வியாஸ முனிவரால் பல கிளைகளாக வகைப்படுத்தப்பட்டிருக்கின்றன. வேத வ்யாஸரின் காலத்தில் 1180 சாகைகளாக (கிளைகளாக) வேதம் வகைப்படுத்தப்பட்டிருந்தன. வேதம் அநாதி என்பதை என்றும் மறத்தல் கூடாது. நம் ரிஷிகள் மூலமாக நமக்கு எட்டியவைதான் 1180 சாகைகள்.

1. ஸ்தோத்ரங்கள், ப்ரார்த்தனைகள் வடிவங்களிலிருந்த மந்திரங்கள் **ரிக் வேதமாக** வகைப்படுத்தப் பட்டிருக்கிறது.

2. யக்ஞவிதிகள், ஷடங்குகளைப் பற்றிய மந்திரங்கள் போன்றவை **யஜுர் வேதமாக** வகைப்படுத்தப் பட்டிருக்கிறது.

3. இசை வடிவத்திலுள்ள மந்திரங்கள் **ஸாம வேத**மாகவும்

4. ஆபத்துக்களையும் துன்பங்களையும் போக்கிக் கொள்வதற்கான விஷயங்களையும், முறைப்படி செய்யும் ஷடங்குகளின் போது தெய்வங்களுக்குச் செய்யப்படும் ப்ரார்த்தனைகளையும் கொண்ட

மந்திரங்கள் அதர்வவேதமாகவும் வகுக்கப் பட்டுள்ளது.

விஷ்ணு புராணத்தில் ரிக் வேதத்தில் **இருபத்தி ஒன்றும்** (21)

க்ருஷ்ண யஜுர் வேதத்தில் **தொண்ணூற்றி நான்கும்** (94)

சுக்ல யஜுர் வேதத்தில் **பதினைந்து** கிளைகளுமாக (15)

மொத்தம் யஜுர்வேதத்தில் **நூற்றி ஒன்பது** சாகைகளும்

ஸாம வேதத்தில் **ஆயிரம்** (1000) சாகைகளும்

அதர்வ வேதத்தில் **ஐம்பது** (50) சாகைகளும்

- என்று மொத்தம் 1180 சாகைகளுக்குக் கணக்குக் காட்டப்பட்டிருக்கிறது.

வ்யாஸர் அவருடைய நான்கு சிஷ்ய முனிவர்கள் ஒவ்வொருவரிடமும் ஒரு வேதத்தைக் கற்பிக்கக் கொடுத்தார்.

பைல முனிவர் ரிக் வேதத்தையும்

வைசம்பாயன முனிவர் யஜுர் வேதத்தையும்

ஜைமினி முனிவர் ஸாம வேதத்தையும்

ஸுமந்து முனிவர் அதர்வ வேதத்தையும் முறையே பெற்றுக் கொண்டனர்.

ஒவ்வொரு வேதமும் **ஸம்ஹிதா, ப்ராஹ்மணம், ஆரண்யகம், உபநிஷதம்** என்ற நான்கு பகுதிகளைக்

கொண்டவை என்பதையும் ஏற்கெனவே சென்ற பாடங்களில் பார்த்தோம்.

1. **ஸம்ஹிதா** (ஸம்ஹிதை) என்பது ஶ்லோகங்களையும், பல தெய்வங்களுக்கான ப்ரார்த்தனைகளையும் கொண்டதாக இருக்கிறது.

2. **ப்ராஹ்மணம்** என்பது வைதிக கர்மாக்களையும், அவை செய்யப்படவேண்டிய முறைகளைப் பற்றிய விவரத்தையும் கொண்டதாக இருக்கிறது.

இந்த இரண்டு பகுதிகளும், வேதங்களின் **கர்மகாண்ட** பகுதிகளாக அமைகின்றன.

3. **ஆரண்யகம்** பல்வேறு உபாஸனைகளையும், தியானங்களையும் கொண்டிருக்கின்றது.

4. ஆரண்யகத்தின் கடைசிப் பகுதி, **'ப்ரஹ்மவித்யா'** என்னும் பரம்பொருளைப் பற்றிய அறிவைத் தெரிவிப்பதான **உபநிஷதங்**களைக் கொண்டிருக்கின்றன.

வேதங்களின் கடைசி இரண்டு பகுதிகள் முறையே உபாஸனா, ஞான காண்ட பகுதிகளாக அமைகின்றன.

தற்காலத்தில் ஸம்ஹிதை, ப்ராஹ்மணம் ஆகிய பகுதிகளின் பல ஶாகைகள் மனித ஸமுதாயத்திற்குக் கிடைக்காமல் போய்விட்டன.

ஆயிரத்து நூற்றி எண்பது ஶாகைகள் (1180) இருந்த நம் பாரத தேசத்தில் ஏறத்தாழ ஏழே (7) இன்றைய தினத்தில் அறிந்ததாக இருக்கின்றன. ஆனால் வேதங்களில் அடங்கியுள்ள நிரந்தர உண்மைகள் உபநிஷதங்களின் போதனை மூலம் மனித ஸமுதாயத்தைத் தொடர்ந்து ஆசிர்வதித்துக் கொண்டிருக்கின்றன.

1) ரிக் வேதம்:

ரிக் வேதத்தின் ஸம்ஹிதா பிரிவானது, 'ரிக்' என்று சொல்லப்படும் மந்திரமான, பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட ரிக்குகளின் தொகுப்பாகும். பல ரிக்குகள் செய்யுட்களான ஸூக்தங்களின் வடிவில் இருக்கின்றன. ஸம்ப்ரதாயமாக அவை ஏற்றி, இறக்கி, ஸமனாக (உதாத்தம், அநுதாத்தம், ஸ்வரிதம்) மூன்று ஸ்வரங்களில் ஓதப்படுகின்றன. பல்வேறு தேவதைகளை ஆர்வமாக வழிபடும் ஸ்தோத்ர வடிவங்களாக ரிக் வேதம் இருக்கிறது.

நெருப்பின் தேவனான அக்னி, மழையின் தேவதை இந்திரன், மரணத்தின் தேவனான யமன், நீரின் தேவனான வருணன் ஆகிய தேவதைகளைத் ஸ்துதிக்கும் ரிக்குகளாக இருக்கின்றன.

பதினாறு ஸம்ஸ்காரங்களில் ஒன்றான திருமணச் சடங்கு, ரிக் வேதத்தில் விவரிக்கப் பட்டிருக்கும் திருமணத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டிருக்கிறது. இம்மை மறுமைக்கு வேண்டிய எல்லாப் பலன்களையும் வேண்டுவதாக விவாஹ மந்திரங்கள் உள்ளன.

ஐதரேய ஆரண்யக பிரிவில் **ஐதரேய உபநிஷதம்** அடங்கியிருக்கிறது. **கௌஷிதகீ உபநிஷதமும்** ரிக்வேதத்தைச் சார்ந்ததே.

2) யஜூர் வேதம்:

'யஜூர்' என்னும் சொல் 'வழிபடுதல்' என்ற பொருளைக் கொண்ட **'யஜ்'** என்ற மூலச் சொல்லிலிருந்து பெறப்பட்டதாகும். யஜூர் வேதத்திலுள்ள ஸம்ஹிதா

பிரிவில், ரிக் வேதத்திலுள்ள பல உயர்ந்த ஸ்தோத்ர பூர்வமான மந்திரங்கள் காணப்படுகின்றன. சிவனைப் பற்றிய **ஸ்ரீருத்ரம்** இதில் தான் உள்ளது.

சுக்ல யஜுர், க்ருஷ்ண யஜுர் என்ற இரு பிரிவுகளாக இவ்வேதம் உள்ளது. முக்ய பத்து உபநிஷத்துகளில் முதலாவதாக உள்ள **ஈஶாவாஸ்ய உபநிஷதமும்**, நிறைவாக உள்ள **ப்ருஹதாரண்யக உபநிஷதமும்** சுக்ல யஜுர் வேதத்திலும், **தைத்திரீய, கட, ஸ்வேதஶ்வதார உபநிஷத்துக்கள்** க்ருஷ்ண யஜுர் வேதத்திலும் இருக்கின்றன.

3) ஸாம வேதம்:

ரிக், யஜுர் வேத மந்த்ரங்களின் உச்சரிப்புகளைப் போலில்லாமல் ஸாம வேதத்தின் ஸம்ஹிதை பிரிவு, ராகங்களை நீட்டி, இசை வடிவத்தில் பாடக்கூடிய மந்த்ரங்களைக் கொண்டிருக்கின்றன.

ஸாம வேதத்தில் **கேன உபநிஷத்தும், ஸாந்தோக்ய உபநிஷத்தும்** அடங்கியுள்ளன.

4) அதர்வ வேதம்

அதர்வ முனிவரிடமிருந்து இவ்வேதம் இப்பெயரைப் பெற்றிருக்கிறது. இந்த வேதத்தின் ஸம்ஹிதைப் பிரிவில் மந்த்ரங்கள் செய்யுள், உரை நடை வடிவங்களில் இருக்கின்றன. தேவதைகளுக்கான ஸ்தோத்ரங்களும், ப்ருத்வி ஸூக்தமும் இந்த வேதத்தில் அடங்கியிருக்கின்றன.

நன்கு அறியப்படும் **ப்ரச்ன, முண்டக, மாண்டூக்ய உபநிஷத்துக்கள்** இதில் அமைந்திருக்கின்றன.

4. ஹிந்து கடவுளர்கள்

(ஈஸ்வர தத்துவம்)

விவேக் : அண்ணா! வணக்கம்.

அண்ணா : மற்றவர்கள் எங்கே?

விவேக் : தாமரையும் வித்யாவும் வந்து கொண்டிருக்கிறார்கள். முருகனை ஒரு வாரமாகப் பார்க்கவில்லையே? (அதற்குள் தாமரையும் வித்யாவும் உள்ளே நுழைகிறார்க்கள்)

தாமரை : நமஸ்காரம் அண்ணா!

வித்யா : வணக்கம் அண்ணா வணக்கம்.

அண்ணா : வணக்கம் வணக்கம் வாங்க. முருகன் எங்கே காணவில்லை?

தாமரை : என்னிடத்தில் வந்து விடுவதாகத்தான் சொன்னான். கேதார் மக்கள் நிவாரண ஸமிதிக்காக நேற்று திரட்டிய தொகையை **'தர்ம ரக்ஷண ஸமிதி'** மாநிலப் பொதுச் செயலாளர் **ஸ்ரீகணபதி அண்ணா** அவர் களிடம் சேர்ப்பிப்பதற்காக சென்றிருக்கிறான்.

அண்ணா : ஓ அப்படியா! மிகவும் நல்லது.

விவேக் : நாங்களும் அதற்காக நிதி திரட்டி அளித்திருக்கிறோம் அண்ணா.

அண்ணா : நம் பாரத தேசத்தின் பண்பாடு அதுதான். எங்கு யாருக்கு கஷ்டம் நேர்ந்தாலும் அதற்காக உதவ முன்வர வேண்டும் என்பதுதான் நம் தர்மம். ஹிந்துவிற்கு இந்தப் பண்பு இயற்கையாக இருந்து வந்தது. ஆயிரம் ஆண்டுகால அடிமைத் தனத்தில் சுயநலம் அதிகமானதால் மறந்துபோய்விட்டது. அதனால்தான் ஸ்வாமி விவேகானந்தர் சொன்னார்:

'உலகத்தில் எந்த ஒரு மூலையில் ஹிந்து துன்பப்பட்டாலும் அது உனக்கு ஏற்பட்ட துன்பமாக நீ கருத வேண்டும். அப்பொழுதுதான் அப்பொழுது மட்டுமே நீ ஹிந்துவாகிறாய்'

வித்யா : அப்படியானால் ஹிந்துவுக்கு மட்டும்தான் உதவ வேண்டும் என்கிறாரா?

அண்ணா : ஸ்வாமி விவேகானந்தர் அந்தக் கருத்தில் சொல்லவில்லை. ஹிந்துவின் அடிப் படைத் தன்மையே உலகத்திலுள்ள மனிதர்கள் மட்டுமல்ல, எல்லா உயிரினங் களும் நலமுற வாழ வேண்டுமென்பது தான். அதன் அடிப்படையிலே தான் வாழ்க்கை முறையையும் நமக்கு அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். இந்த வாழ்வியலுக்குச் சொந்தக்காரனான ஹிந்துவின் தன்மை மங்காமல் விளக்கம் பெற வேண்டுமானால் **'ஹிந்து**

ஒற்றுமை சக்தி' மிகவும் அவசியம். அதனால்தான் ஸ்வாமிஜி அப்படிச் சொல்லியிருக்கிறார்.

தாமரை : இதோ! முருகனும் வந்துவிட்டான்.

முருகன் : அண்ணா வணக்கம்.

அண்ணா : முருகா! இவர்கள் மூலமாக கேதார் பேரிடர் நிவாரண நிதி சேர்ப்பது பற்றிக் கேள்விப் பட்டேன். மிக்க மகிழ்ச்சி. சரி நாம் நம் கலந்துரையாடலைத் தொடர்வோமா!

விவேக் : சென்ற முறை கடவுளை ஏன் நம் கண்ணால் பார்க்கமுடியவில்லை? என்று முருகன் கேள்விக்கு பதில் சொல்லத் துவங்கி அதிலிருந்து பஞ்ச பூதங்கள், தொழிற்கருவிகள் அறிகருவிகள் என எல்லா விளக்கங்களும் சொல்லப்பட்டன அண்ணா!

அண்ணா : ஞானேந்திரியங்கள் ஐந்தனுள் ஒரு கருவி செய்வதை இன்னொரு கருவி செய்ய முடியாது. ஒலியைக் காதால்தான் கேட்க முடியும். ஒளியைக் கண்ணால்தான் பார்க்கமுடியும். இப்படி, இருக்கின்ற ஐந்து கருவிகளுக்கும் ஐந்து விதமான அறிவு பெற இறைவன் அமைத்திருக்கிறான்.

வித்யா : அப்படியானால் இறைவனைப் பார்ப்பது என்பது முடியாதா?

அண்ணா : காற்றை பார்க்கிறோமா?

விவேக் : காற்றை நம் ஸபர்சத்தினால் உணர் கிறோம். கண்ணால் பொருட்கள் அசை வதைப் பார்க்கும்போது காற்று இருப்பதை உணர்கிறோம். இப்படித்தான் சுவையறிவும், சப்த (ஒலி) அறிவும், மற்ற எல்லாமும்.

அண்ணா : சபாஷ்! இந்த பஞ்ச பூதங்களினால் படைக்கப்பட்ட இந்த உலகில் அறிவு பெறுவதற்காகக் கொடுக்கப்பட்ட கருவி களுக்கு ஒரு வரையறை உண்டு. இறைவன் பேரறிவாளன் அல்லவா? அவனைப் பற்றி மேலும் விளக்கம் பெறுவோம்.

குயவர் பானை எடுத்துக்காட்டையே மீண்டும் நினைவு கொள்வோம். ஒரு மண்பானையை எடுத்துக் கொண்டால், ஒன்று பானையை உண்டாக்குவதற்கான அறிவையும் ஆற்றலையும் பெற்ற குயவன் படைப்பாளியாக இருக்கிறான். மற்றொன்று பானையை உண்டாக்குவதற்கு மூலப் பொருளாகக் களிமண் இருக்கிறது.

முருகன் : உன் மண்டையிலே களிமண்தான் இருக்கிறது என்கிறார்களே என் அம்மா.

தாமரை : முக்யமான விஷயத்தை அண்ணா சொல்லிக் கொண்டிருக்கும்போது இப்படியா பேசுவது.

அண்ணா : சரி சரி இப்படித்தான் இடையிடேயே நகைச்சுவையாகவும் பேசவேண்டும். இல்லையென்றால் ஸ்வாரஸ்யம் இருக்காது. சரி கவனிப்போம்.

படைக்கின்ற குயவன், பேரறிவு காரணத்தை **'நிமித்த காரணம்'** என்றும், களிமண்ணாகிய மூலப்பொருள் காரணத்தை **'உபாதான காரணம்'** என்றும் சொல்கிறோம்.

வித்யா : படைக்கின்ற ஒவ்வொரு பொருளுக்கும் இந்த **'நிமித்த காரணம்'** **'உபாதான காரணம்'** உண்டுதானே அண்ணா!

அண்ணா : ஆம் வித்யா! ஆனால் ஒரு ஸந்தேகம் இயற்கையாக வரும்.

விவேக் : என்ன ஸந்தேகம் அது?

அண்ணா : மூலப்பொருளான மண் குயவனிடமிருந்து வேறுபட்டது அல்லவா?

விவேக் : ஆமாம்.

அண்ணா : எனதருமை குழந்தைகளே! படைப்பு (சிருஷ்டி) அப்படி இல்லை. படைப்பின் நிமித்த காரணமும் (அறிவு) இறைவன்; உபாதான காரணமும் (பொருள்) இறைவன்.

தாமரை : குயவன் வேறு; பானைக்கான மூலப் பொருளான களிமண் வேறு என்பது போல இல்லை என்கிறீர்கள் அல்லவா?

முருகன் : குயவன் மண் தனித்தனியாக இருக்கும்போது குயவன் எப்படி வந்தான்? மண் எப்படி வந்தது? என்ற ஐயம் வருமல்லவா அண்ணா?

அண்ணா : பலே பலே மிகச் சரியாகச் சொன்னாய்.

நிமித்த காரணம் படைப்பிலிருந்து வேறானதாக இருந்தால், படைப்பிற்கான உபாதான காரணம் எங்கிருந்து எப்படி தானே வந்தது என்ற வினா எழுகிறது.

களிமண் (உபாதான காரணம்) தானாகவே இருக்கிறது என்றும் சொல்ல முடியாது. ஒரு ஜடமான பொருள் தன்னைத்தானே எவ்வாறு உருவாக்கிக் கொள்ள முடியும்? எனவே படைப்பின் உபாதான காரணம் வேறு எந்த இடத்திலிருந்தும் வரவில்லை; அது நிமித்த காரணத்தைக் காட்டிலும் வேறாக இருக்க முடியாது.

வித்யா : அண்ணா! அப்படியானால் ப்ரபஞ்சமும் ப்ரபஞ்சத்தை படைத்த இறைவனும் ஒன்றா?

விவேக் : படைப்பும் படைப்பாளியும் ஒன்றா? என்று கேட்கலாமல்லவா!

அண்ணா : உண்மை. முழு படைப்பிற்கும் அறிவு, பொருள் என்ற இரண்டு காரணங்களாக இருக்கும் ஒருவர்தான் கடவுள்.

முருகன் : அண்ணா! படைப்பும் படைப்பாளியும் ஒன்று. அதாவது நிமித்த காரணமாகவுள்ள குயவனும், உபாதான காரணமாக உள்ள களிமண்ணும் ஒன்றே என்கிறீர்கள். ஆனால் குயவன் உயிர்ப்பொருள், களிமண் ஜடப் பொருள் இரண்டுமே இறைவன் என்றால் எப்படி?

அண்ணா : மிகவும் முக்கியமான கேள்வியைக் கேட் டிருக்கிறாய்? சபாஷ். கேள்விகள் கேட்பது தான் ஹிந்து தர்மத்தின் சிறப்பு. நம் உப நிஷத்துக்களில் பல கருத்துக்கள் கேள்வி-பதில் வடிவமாகவே அமைந்துள்ளன.

தாமரை : கேள்விச் செல்வம் என்பது இதுதானோ?

அண்ணா : அது செவி வழி கேட்டல். அதனால் அறிவு பெறுதல். ஆனால் ஒருவகையில் சரிதான். வினாக்குறியீடு நம் காதுபோலத்தானே இருக்கிறது.

வித்யா : ஆமாம்



விவேக் : அண்ணா! எனக்கு ஒரு குறள் நினைவிற்கு வருகிறது.

அண்ணா : சொல்லுங்களேன்.

விவேக் : **கற்றிலன் ஆயினும் கேட்க அஃது ஒருவருக்கு ஒற்கத்தின் ஊற்றாம் துணை.**

3

.முருகன் : இக்குறளின் பொருள் என்ன?

விவேக் : **"ஒருவன் சிறந்த நூல்களைக் கல்லாதவனாயினும் அறிவுடையவர் கூறுவனவற்றைக் கேட்டறிய வேண்டும். அக்கேள்வியறிவு அவனுக்கு மனத் தளர்ச்சி ஏற்படும்போது ஊன்றுகோல் போல் துணைபுரியும்."**

தாமரை : கேள்வி என்றால் காது கொடுத்து கேட்டல்; கேட்டவற்றில் ஐயம் வரும்போது வினாக்கள் எழுப்புதல்.

வித்யா : வினாக்களை எழுப்புவதால்தான் அறிவு பிறக்கிறது; சிறக்கிறது.

அண்ணா : பலே! பலே! பலே! நன்றாக விவாதம் செய்கிறீர்களே! சரி சரி நேரம் கடந்துவிட்டது. தர்ம ரக்ஷண ஸமிதியின் **'ராமாயண நவாஹம்'** (ஒன்பது தினங்கள் ராமாயணம் சொல்லுதல்) பல இடங்களில் நடைபெறுகின்றன. அதற்கான ஏற்பாட்டிற்குச் செல்ல வேண்டும். பிறகு நம் கலந்துரையாடலைத் தொடர்வோம். நீங்களும் கட்டாயம் ராமாயண ஞான வேள்வியில் கலந்து கொள்ள வேண்டும்.

நால்வரும்
சேர்ந்து : அப்படியே செய்கிறோம். வணக்கம் அண்ணா. ஜய் ஸ்ரீராம்.

அண்ணா : ஜய் ஸ்ரீராம்.

5. ஹிந்து வாழ்வியல்
(ஜீவன த்ருஷ்டி)

பணத்தின் மீது இருக்க வேண்டிய மனப்பான்மை

'பணம்' என்ற ஒன்று நடைமுறையில் வருவதற்கு முன்னர், பொருள் கொடுத்து தேவையான பொருள் பெற்றுக் கொள்ளும் நிலை நடைமுறையில் இருந்தது. காசு, நாணயம், ரூபாய் நோட்டு என்று பணம் பல்வேறு பெயர்களுடன் உலவி வந்த நிலையில் கிரெடிட் கார்டு (Credit card) டெபிட் கார்டு (Debit card) என்று வந்திருக்கிறது.

'பணம்' என்பதை 'பொருள்' என்று சொல்கிறோம். 'பொருள்' என்றாலும் 'அர்த்தம்' என்றாலும் சொல்லின் விளக்கமாகவும் அமைவதைக் காண்கிறோம்.

'பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை'

'பணம் பாதாளம் வரை பாயும்'

'பணம் பந்தியிலே குணம் குப்பையிலே'

- என்றெல்லாம் பணம் பற்றிய கருத்துக்கள் நம்மிடையே உலவுகின்றன.

சட்டபூர்வமாக புழக்கத்தில் இருக்கும் ஒன்று பணம். அதன் மூலம் வ்யாபாரம் செய்து பல்வேறு பொருட்களைச் சம்பாதிக்கிறோம். ஸர்வதேச வ்யாபாரச் சந்தையால் பணத்திற்கு மாறுபடக் கூடிய ஒரு மதிப்பு

நிர்ணயிக்கப்பட்டு, விலை கொடுத்து வாங்கும் சக்தியும் அதற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

பணத்தால் வாங்கக்கூடிய பொருட்களை நோக்கியிருக்கும் மனப்பான்மையால் சுயசார்புள்ள ஓர் உறவை பணத்துடன் பலர் கொண்டிருக்கின்றனர்.

பணம் தாழ்ந்தவனை உயர்ந்தவனாக்குகிறது; அதே பணம் இல்லாமல் போகும்போது உயர்ந்தவன் தாழ்ந்தவனாகிறான்.

பணத்தைக் காட்டிலும் சிறந்த உறவினர் இல்லை என்றே பெரும்பாலானவர்களைச் செயல்பட வைத்திருக்கிறது. பெரும்பாலும் பொருட்கள், குடும்பம், நண்பர்கள் எல்லா வற்றையும் பணத்தால் வாங்க முடியும் என்று காணப்படு கிறது. அதிகாரம், பாதுகாப்பு, மகிழ்ச்சி இவற்றின் மூலதன மாகப் பணம் பார்க்கப்படுகிறது. மிகுந்த செல்வ முடையவர் மகிழ்வுடன் இருப்பவர் என்று கருதப்படுகிறது.

பணம் சேர்க்க வேண்டும், முறையாகச் சேமித்து வைக்கப்பட வேண்டும் என்று ஒரு சிந்தனை இருக்கிறது. இன்றைய மேற்கத்திய பொருளாதாரம் அதனை மாற்றிச் செலவு செய்யச் சொல்கிறது; சேமிப்பை அழிக்கச் சொல்கிறது. பணம் குவிப்பது கூடாதுதான்; ஆனால் பணம் சேமிப்பது குடும்பத்திற்கு நல்லதல்லவா! அறச் செயல்கள் செய்வதற்கு பணம் அவசியமல்லவா!

நுகர்வு அநாசாரத்தினால் பெரும்பாலான ஐரோப்பிய நாடுகள் இன்று கடனாளியாகியுள்ளன; சில நாடுகள் திவாலாகி (Bankrupt) உள்ளன. அதனால்தான் வெளிநாட்டு கம்பெனிகள் நுகர்வோர்கள் அதிகம்

இருக்கும் நம் பாரத நாட்டில் படையெடுத்து நுகர்வு அநாசாரத்தைப் பெருக்கியுள்ளன.

நம் தர்மம் 'பணம்' அதாவது 'பொருள்' பற்றி எவ்வித கண்ணோட்டம் நாம் கொண்டிருக்க வேண்டும் என்று சொல்வதை நாம் மனதில் கொள்ள வேண்டும்.

1. பொருள் சேமிப்பு தர்மம் செய்வதற்கே:

2. உணவிலும் உடையிலும், ஏன் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் நியதியைச் சொல்லி வளர்ந்திருப்பது பாரதீயப் பண்பாடு. தேவைக்கு மேல் பொருள் சேர்க்காதே; தேவைக்கு மேல் பொருள் சேர்ப்பவன் (எந்த நிலையில் இருந்தாலும்) திருடன் என்றே நம் மறைகள் மொழிகின்றன.

2. **'செல்வத்துப் பயனே ஈதல்'** என்று சொல்லியே நம்மை வளர்த்திருக்கிறார்கள்.

ஊடகங்களில் வெளிவரும் அசுர விளம்பரங்கள் எப்படியாவது கட்டுப்பாடற்ற நுகர்ச்சியை மக்களிடத்திலே விதைத்து வந்து தற்போது அதில் வெற்றியும் கண்டிருக்கிறது.

பணம் உண்மையிலேயே எதைக் கொடுக்கக்கூடியது என்பதை ஒருவர் தீர ஆராயும் போது பணம் கொஞ்சம் சுகங்களை அளிக்குமே தவிர அதனால் மகிழ்ச்சியை உத்தரவாதம் செய்துதர முடியாது என்பதை அறிந்துகொள்ள முடியும்.

வாழ்க்கையில் பணத்தால் வாங்க முடியாத பொருட்கள் பல உள்ளன.

- பணத்தால் படுக்கையை வாங்கலாம்; உறக்கத்தை வாங்க முடியாது.
- பணத்தால் ஒரு மாளிகையை வாங்க முடியும்; ஆனால் அதை ஒரு வாழும் வீடாகச் செய்ய முடியாது.
- பணத்தால் ஒரு நூலகத்தை வாங்க முடியும்; ஆனால் ஒருவரை, ஒரு புத்தகத்தைப் படிக்க வைக்கவும், அதில் எழுதியிருப்பதைப் புரிந்து கொள்ள வைக்கவும், அந்த எழுத்தின் மதிப்பை உணர வைக்கவும் முடியவே முடியாது.
- பணத்தால் மிக உயர்ந்த இசைக் கருவியை வாங்க முடியும், ஆனால் ஒருவரை இசை வித்வானாகவோ, ஸங்கீத ரஸிகராகவோ ஆக்க முடியாது.
- பண்டங்களைப் பெறக்கூடிய சக்தியை ஒருவர் பணத்தால் அடைய முடியும். ஆனால் அவற்றை அனுபவிக்கக் கூடிய உள் ஸ்வதந்திரத்தைப் பணத்தால் பெற முடியாது.

பணம் ஒருவரைச் செல்வந்தனாக ஆக்குமா?

ஒரு சிலர் பணக்காரர்களாக இருந்தும், தங்களைப் பணக்காரனாக நினைத்துப் பார்க்க முடியாமல் இருக்கிறார்கள்.

வேறு சிலரிடம் நிறைய பணமும் உடைமைகளும் இல்லாமல் இருந்த போதிலும் அவர்களிடம் உள்ளூர ஒரு ஏழ்மைத்தனம் இல்லை.

ஒருவரின் அந்தரங்க உணர்வான செல்வநிலை அல்லது வறுமை நிலை அவர் பாதுகாப்பாக நினைக்கும் தன்மையுடன் ஸம்பந்தப்பட்டிருக்கிறது.

எதிர்காலத்தைப் பற்றிக் கவலையின்றி, பாதுகாப்பாக நிறைவுடன் இருக்கும் மனநிலையை மதித்து உணர்வதால் பாதுகாப்பு உணர்வு பிறக்கிறதே அன்றி, வெளியிலிருக்கும் செல்வத்தால் அல்ல.

சுய சார்பற்ற விஷய சார்புள்ள பணத்தின் உண்மையான மதிப்பையும் வாழ்க்கையில் பணம் செய்யக்கூடியதையும் ஒருவர் புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

பலவிதமான லக்ஷியங்களை அடைய பணம் ஒரு கருவியாகும். ஆனால் பாதுகாப்பான உணர்வின் தேவையை அதனால் ஈடுசெய்ய முடியாது.

மனிதனின் எல்லாவிதப் பெரு முயற்சிகளின் அடிப்படை யான லக்ஷியம் முழுமையான ஸ்வதந்திரத்தையும் மகிழ்ச்சி யையும் அடைவதுதான். **'அம்ருதத்வம்'** என்று கூறப்படும் இந்த லக்ஷியத்தை, செயல்களாலோ, சந்ததியினராலோ செல்வத்தாலோ அடைய முடியாது என்று உபநிஷத்துகள் சுட்டிக்காட்டுகின்றன. அவ்வித பயன்கள் ஒரு வரையறைக்குட்பட்ட திருப்தியைத் தான் அளிக்கின்றன.

ந கர்மணா ந ப்ரஜயா த[4]நேந த்யாகே[3]நைகே அம்ருதத்வமாநஶு;

- மஹாநாராயண உபநிஷத்

(அழியாத நிலைப்பேற்றைச் செயலாலோ, ஸந்ததியினராலோ, செல்வத்தாலோ அடைய முடியாது. தியாகத்தாலேயே அதைப் பெற முடியும்.)

பணம் ஸம்பந்தமாக தியாகம் என்பது ஒரு மனப்பான்மை. பணத்தின் உண்மையான மதிப்பை ஒருவர் அங்கீகரித்து, அதன் வரையறைக்குட்பட்ட பயன்களையும் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும். இதுபோன்ற மனப்பான்மையால் ஒருவர் பணத்தை பண்பட்ட வழியில் பயன்படுத்த முடியும்; மற்றவர்களுடன் அதைக் கௌரவமாக பகிர்ந்து கொள்ளவும் முடியும்.

'எளிய வாழ்க்கை உயர்ந்த சிந்தனை' இதுவே பாரதீய பண்பாட்டின் தாரக மந்திரம்.

எளிமை என்பதை வறுமை என்று அந்தணர்கள் எண்ணியதால் தான் ஹிந்து ஸமுதாயம் வீழ்ச்சி கண்டது.

எத்தனையோ தொழில்கள் இருக்கின்றன. ஜனங்கள் அவற்றில் எதையோ ஒன்றை மேற்கொண்டு ஊழியஞ்செய்வது ஊதியத்துக்காகத்தான். இதில் தப்பாகவோ கௌரவக் குறைச்சலாகவோ எதுவும் இருப்பதாக யாரும் நினைக்கவில்லை. ஆனாலும் காசுக்காக ஈஃப்வர பூஜை பண்ணுவதையும் கல்வி போதிப்பதையும் மாத்திரம் பழைய காலத்தில் ரொம்பவும் நிக்ருஷ்டமாக (தாழ்வானதாக) நினைத்திருக்கிறார்கள். ஆத்ம நிறைவையே தரக்கூடியவற்றைக் கேவலம் வயிற்றை நிரப்பிக் கொள்வதோடு ஸம்பந்தப்படுத்துவது தகாது என்ற எண்ணமே காரணம். இதிலிருந்து வித்யோபாஸனையை ஈஃப்வர ஆராதனைக்கு ஸமமாக நினைத்திருக்கிறார்களென்று தெரிகிறது.

6. ஹிந்து பண்பாட்டுப் பாரம்பரியம்
(மண் வாஸனை)

ஆசிரியர் தினம்

சாதுர்மாஸ்ய ஸங்கல்ப நாள், ஆஷாட பூர்ணிமா குரு பூர்ணிமா, வ்யாஸ பூர்ணிமா என்றெல்லாம் அழைக்கப்படுகின்ற நாளே உண்மையில் **ஆசிரியர் தினம்** ஆகும்.

நம் பாரத நாட்டின் வரலாற்றில் காலங்காலமாக எது ஆசிரியர் தினமாகக் கொண்டாடப்பட்டு வந்துள்ளது?

'வ்யாஸ பூர்ணிமா' எனப்படும் **ஆஷாட பௌர்ணமி** நாள்தான் ஆண்டுதோறும் நாம் கொண்டாடப்பட வேண்டிய **ஆசிரியர் தினம்** ஆகும்.

இந்த நாள் இன்றும் **குரு பூர்ணிமா** என்ற பெயரில் குருவிற்கு மரியாதை செய்யும் நாளாக ஆன்மிகத் துறையில் கொண்டாடப்படுகிறது.

முன்னர் நம்நாட்டில் குருகுலங்கள் இருந்த காலத்தில் தமது கல்வி முடிந்த ஆண்டில் மாணாக்கர்கள் குருவிற்குத் தம்மாலியன்ற காணிக்கையைச் செலுத்தி குருவின் ஆசி பெற்று விடைபெறும் நாளும் இதுவே.

அது போலவே புதிதாகச் சேரும் மாணவர்கள் குருவிற்குத் தங்கள் மரியாதையைச் செலுத்தி குருகுலங்களில்

சேர்வர். ஆனால் அவர்களது பாடங்கள் ச்ராவண பூர்ணிமா தினத்தன்றுதான் தொடங்கும்.

இந்த நாள்தான் (ஆஷாட பூர்ணிமா) நாடு முழுவதும் (குரு பூர்ணிமா) ஆசிரியர் தினமாக அனுஷ்டிக்கப்பட்டு வந்துள்ளது.

இந்த நாள் பாரம்பர்யத்தோடு ஒட்டிய நமது பண்பாட்டிற்கியைந்த ஆசிரியர் தினம். இந்த நாள் வ்யாஸ பகவானுடன் ஸம்பந்தப்பட்டது.

ஓர் ஆசிரியர் ஜனாதிபதியானார் என்ற கௌரவத்திற்காக டாக்டர் ராதாகிருஷ்ணனின் பிறந்தநாளை ஆசிரியர் தினமாகக் கொண்டாடுவது எந்தவிதத்திலும் சரியல்ல. இப்படி ஒவ்வொரு ஜனாதிபதிக்காக நாம் மரியாதை செய்வது என்றால் அது நம் பண்பாட்டிற்கு உகந்ததல்ல.

ஸ்ரீவ்யாஸ பூஜையே ஸ்ரீ குரு பூஜையாகும். குரு பூஜையன்று காலையில் நீராடி பின் **நீறாடி** (நெற்றிச் சின்னம் அணிந்து) ப்ரார்த்தனை செய்து குருவருள் பெற்று ஞான விடுதலை பெறுவோமாக!

வ்யாஸரோடு ஸம்பந்தப்பட்ட வ்யாஸ பூர்ணிமா தினத்தை நாடெங்கும் அனைத்துக் கல்வி நிலையங்களிலும் ஆசிரியர் தினமாக கொண்டாடுவதே சாலப் பொருத்தமாகும். ஆசிரியர்களுக்கு வ்யாஸரின் பெயராலேயே அன்று விருதுகள் வழங்கி கௌரவிக்க வேண்டும்.

அதுவன்றி யாரோ ஒரு மனிதர் ஆசிரியராக இருந்து ராஷ்ட்ரபதியானதற்காக அவர் பிறந்த நாளை ஆசிரியர்

தினமாகக் கொண்டாடுவது அறிவுடைமையாகுமா?

ஆசிரியராக இருந்து ராஷ்ட்ரபதியானதைக் கௌரவிக்க அவர் பிறந்த தினம் ஆசிரியர் தினம் என்றால், நாளை வக்கீலாக, டாக்டராக இருந்து ஜனாதிபதியானவர் பிறந்த தினங்கள் வக்கீல்கள் தினம், டாக்டர்கள் தினம் எனக் கொண்டாடப்படும் அபாயம் உள்ளது.

நம் பண்பாட்டில் ஆசிரியராக இருப்பது ஒரு தொழில் செய்வது அல்ல; **ஆசிரியர் என்பது ஓர் உறவு.** (It is not a profession; it is a relationship) மேலை நாட்டில்தான் Teaching is a profession. நம் நாட்டில் Teaching is not at all a profession, it is a divine relationship to father, mother and God.

ஆசிரியர்கள் தம்மை மற்ற தொழில்களில் உள்ளவர்களோடு ஒப்பிட்டுக்கொண்டு உரிமைகளுக்காகப் போராடுவது நல்லதல்ல; ஊதிய உயர்வு கேட்டு உரிமைக்குரல் எழுப்புவது பண்பாடு சீர்கேடு அடைந்துள்ளதைக் காட்டுகிறது.

ஆசிரியர்களுக்கு எத்தனை குறைகளிலிருந்தாலும் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட முடியாது; ஈடுபடக் கூடாது.

ஆசிரியர்கள் தங்களது கோரிக்கைகளை வலியுறுத்திப் போராடுவதை நியாயப்படுத்தினால் தாய் தந்தையர்கள் தங்களது மனக்குறைகளுக்காக வேலை நிறுத்தம் செய்யலாம் என்ற நிலை ஏற்படும்.

அப்புறம் கணவன்மார்கள் தீபாவளி, பொங்கல் போன்ற பண்டிகைக் காலங்களில் தங்களுக்கு வேண்டிய புடவை,

நகை வாங்கித் தரவில்லை என்பதற்காக மனைவிமார்கள் ஒன்று சேர்ந்து போராடித் தெருவிற்கு வரலாம் என்றாகிவிடும்.

யாரையாவது நம் நாட்டில் நாம் மதிக்கிறோம் என்றால், ஆசிரியர்களைத் தான். எதற்காக? அவர்களது தியாகத்திற்காகவும் எளிமைக்காகவும்தான்.

நாடு உயர வேண்டுமானால் நல்ல ஆசிரியர்கள் உருவாக வேண்டும். அதற்கு **'குரு பூர்ணிமா'** தினமே ஆசிரியர் தினமாக வேண்டும்.

ஸ்ரீ குருவே துணை.

மூன்று லக்ஷணம் உள்ளவர்தான் ''ஆச்சார்யர்'' என்று வைத்தார்கள்.

1) ஶாஸ்த்ர ஸித்தாந்தத்தை நன்றாகத் தெரிந்து கொண்டிருக்க வேண்டும்.

ஆசிநோதி ஹி ஶாஸ்த்ரார்த்தம்.

2) தெரிந்ததை வாழ்க்கையில் நடத்திக் காட்டும் ஆசார ஸம்பந்நராக இருக்க வேண்டும்.

ஸ்வயம் ஆசரதே

3) இப்படித் தனக்குத் தெரிந்து அனுஷ்டிக்கும் சாஸ்த்ரத்தைப் பிறருக்கும் கற்றுக் கொடுத்து அவர்களையும் ஆசார வாழ்க்கையில் நிலைநாட்ட வேண்டும்.

ஆசாரே ஸ்தாபத்யபி

7. ஹிந்து காலக் கணிதம்

(பஞ்சாங்கம்)

'ஹிந்து காலக் கணிதம்' (பஞ்சாங்கம்) பற்றிய பாடத்தில் கடந்த மூன்று மாதங்களாக ஜ்யோதிஷ (ஜோதிடம்) சாஸ்த்ரம் பற்றியும் ஸௌரமானம் (ஸூர்ய கதி) சாந்த்ரமானம் (சந்த்ர கதி) பற்றியும், உத்தராயண தக்ஷிணாயனம் பற்றியும் வார நக்ஷத்ரங்கள் பற்றியும் ஓரளவிற்குப் பார்த்திருக்கிறோம். பஞ்சாங்கத்தின் ஐந்து அங்கங்களில் 'திதி' பற்றி இப்போது காண்போம்.

'திதி' என்றால் என்ன?

திதி என்பது ஆகாயத்தில் ஸூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையே உள்ள தூரமாகும்.


ஸூரியனிலிருந்து ஒவ்வொரு நாளும் சந்திரன் எவ்வளவு தூரம் விலகிச் சென்றுள்ளார் என்பதைக் குறிப்பதே திதியாகும்.

அமாவாஸ்யை அன்று (அமாவாசை) ஸூரியனும் சந்திரனும் சேர்ந்து இருப்பார்கள்.

பௌர்ணமியன்று இருவரும் நேர் எதிராக அதாவது 180 பாகை (டிகிரி) தூரத்தில் இருப்பார்கள். அதாவது ஸூரியன் இருந்த ராசியில் இருந்து ஏழாவது ராசியில் சந்திரன் இருப்பார். (விளக்கப் படம் காண்க)

ஒரு திதிக்கு 12 பாகையாகும். இந்தத் 'திதி' என்ற சொல்லே திரிந்து 'தேதி' என்றாயிற்று.

விளக்கப்படம்



அமாவாஸ்யை (அமாவாசை)யன்று சேர்ந்திருக்கும் ஸூரியனும் சந்திரனும் 'ப்ரதமை' அன்று பிரிந்த பின்னர் மீண்டும் சேருவதற்கு 30 தினங்களாகும். இந்த 30 தினங்களும் 30 திதிகளாகும். இந்த 30 திதிகளில் பௌர்ணமிக்கும் அமாவாஸைக்கும் மட்டுமே பெயர் உண்டு. மற்றவைகள் ஒன்று, இரண்டு, மூன்று எனப் பொருள்படும் ப்ரதமை, த்விதீயை, த்ருதீயை என்ற சொற்களால் அழைக்கப்படுகின்றன.

எண் (Cardinal Numbers)	திதி (Ordinal Numbers)
1. ஏகம் (ஒன்று)	ப்ரதமை (ப்ரதம) (First)
2. த்வி (இரண்டு)	த்விதீயை (த்விதீய) (Second)
3. த்ரி (மூன்று	த்ருதீயை (த்ருதீய) (Third)
4. சதுர் (நான்கு)	சதுர்த்தி (சதுர்த்த) (Fourth)
5. பஞ்ச (ஐந்து)	பஞ்சமி (பஞ்சம) (Fifth)
6. ஷட் (ஆறு)	ஷஷ்டி (ஷஷ்ட) (Sixth)
7. ஸப்த (ஏழு)	ஸப்தமி (ஸப்தம) (Seventh)
8. அஷ்ட (எட்டு)	அஷ்டமி (அஷ்டம) (Eighth)
9. நவ (ஒன்பது)	நவமி (நவம) (Ninth)
10. தச (பத்து)	தசமி (தசம) (Tenth)

இங்கே 'முதலாவது' (ordinal number) என்று பொருள்படும் 'ப்ரதம' என்ற சொல் கையாளப்பட்டுள்ளது. திதிகளில் 'ப்ரதமை' முதலாவது திதியாதலால் 'ஏகம்' என்ற சொல்லுக்குப் பதிலாக ப்ரதம என்ற சொல் ப்ரயோகப்படுத்தப்பட்டுள்ளது.

பத்து திதிகளுக்கு மேல் வரக்கூடிய திதிகளான ஏகாதசி, த்வாதசி, த்ரயோதசி, சதுர்தசி ஆகிய திதிகளுக்கு பத்துடன் 1, 2, 3, 4 என சேர்த்து பெயர் வழங்கப்பட்டுள்ளது.

11. ஏக + தசம் (1+10) ஏகாதசி

12. த்வி + தசம் (2+10) த்வாதசி

13. த்ரி + தசம் (3+10) த்ரயோதசி

14. சதுர் + தசம் (4+10) சதுர்தசி

இந்தப் பதினான்கு திதிகளில் அமாவாஸைக்கு மறுநாள் ஆரம்பித்து பௌர்ணமிக்கு முதல் நாள் முடியும் திதிகள் **சுக்லபக்ஷ திதிகள்** (வளர்பிறை திதிகள்) எனப்படும்.

பௌர்ணமிக்கு மறுநாள் ஆரம்பித்து அமாவாஸைக்கு முதல்நாள் முடியும் திதிகள் **க்ருஷ்ணபக்ஷ திதிகள்** (தேய்பிறை திதிகள்) எனப்படும்.

சுக்லபக்ஷம் - வளர்பிறை திதிகள்	-	14
க்ருஷ்ண பக்ஷம் - தேய்பிறை திதிகள்	-	14
பௌர்ணமி	-	1
அமாவாஸ்யை	-	1
ஆக திதிகள் மொத்தம்	**-**	**30**

சாந்த்ரமான மாஸம்:

சாந்த்ரமானத்தில் இந்த முப்பது திதிகள் கொண்டதே ஒரு மாதமாகக் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகிறது. அமாவாஸ்யை ஆனவுடன் வரும் ப்ரதமையிலிருந்து அடுத்த அமாவாஸ்யை வரையிலான காலம் ஒரு சாந்த்ரமான மாஸம் ஆகும்.

அதிகமாஸம் என்பது என்ன?

சாந்த்ரமான காலக்கணக்கில் ஆண்டுக்கு 364 தினங்களே வருவதால் ஸௌரமான கணக்கீட்டுக்கு ஈடாக 365.27

தினங்கள் வர 30 மாதங்களுக்கு ஒருமுறை அதிக மாஸம் என்று பதிமூன்றாவது மாஸம் ஒன்றைக் கணக்கிடுவார்கள். அந்த அதிக மாஸத்தை **மலமாஸம்** என்றழைப்பர். இல்லறத்தினர் இந்த அதிக மாஸத்தில் சுபகார்யம் ஏதும் செய்வதில்லை. தர்மானுஷ்டானங் களுக்காக ஒதுக்கி விடுவதால் இந்த அதிக மாஸத்தை **புருஷோத்தம மாஸம்** என்றும் அழைப்பர்.

அதிக மாஸத்தை நிர்ணயிக்கின்ற வழிமுறை:

எது அதிக மாஸம் என்று நிர்ணயிக்க ஒரு வழிமுறை உள்ளது. ஒரு அமாவாஸ்யைக்கும் இன்னொரு அமாவாஸ்யைக்கும் இடையே ஸூர்யன் ஒரு ராசியிலிருந்து இன்னொரு ராசியில் ப்ரவேசிப்பது நடக்கும். இது இயல்பாக நடைபெறும் ஒன்று. (ஸூர்யன் ஒரு ராசியிலிருந்து இன்னொரு ராசியில் ப்ரவேசிக்கும் சுபவேளை தான் **ஸங்க்ரமண வேளை** அல்லது **ஸங்க்ராந்தி** எனப்படுகிறது என்பதை ஆனி மாத ஹிந்து தர்ம ஞானப் புத்தகத்தில் (7) ஹிந்து காலக் கணிதம் (பஞ்சாங்கம்) பாடத்தில் படித்திருப்போம். மீண்டும் நினைவுக்கு கொண்டுவரவும்.

ஆனால் **எந்த ஒரு சாந்த்ரமான மாஸத்தினிடையே அப்படி ராசி ஸங்க்ரமணம் நிகழவில்லையோ, அதனையே அதிகமாஸமாக கணக்கிடுவது மரபு. அஸங்க்ராந்தி மாஸமே அதிகமாஸம் ஆகும்.**

8. ஹிந்து மத உபாக்யானம்

(கதைக் கருவூலம்)

இராமாயணம்

ஆரண்ய காண்டம்

லக்ஷ்மணன், ஸீதையுடன் ராமர் தண்டகவனத்தை அடைந்தபோது, தவம் மேற்கொண்டும், புனித சடங்குகளை புரிந்து கொண்டும், அங்கு வசித்து வந்த முனிவர்களை தரிசித்தது அவர்களுக்கு மிக்க மகிழ்ச்சியைத் தந்தது. கானகத்தினுள் சென்றபோது மிகப் பெரிய உருவத்தைக் கொண்ட விராடன் என்ற ஓர் அரக்கன் கையில் திரிசூலத்துடன் குறுக்கே வந்தான். விராடன் ஸீதையைத் தூக்கிச் செல்வதற்காக விரைந்தான். சண்டை எழுந்ததால் புலம்பும் ஸீதையை அங்கேயே விட்டுவிட்டு, ராமரையும், லக்ஷ்மணனையும் விராடன் தன் தோளில் தூக்கிக் கொண்டு வனத்தினுள் ஓடினான். ஸகோதரர்கள் அவனைக் கொல்லத் தீர்மானித்து ராமர் அவனுடைய வலது புஜத்தையும் வெட்டித் தள்ளினார்கள். விராடன் நிலத்தில் விழுந்தான், ஆனால் சாகவில்லை. எந்த விதத்தாலும் அவனைக் கொல்லமுடியாது என்பதைக் கண்ட ராமர், விராடனைப் புதைப்பதற்காக, லக்ஷ்மணனை ஒரு குழியைத் தோண்டச் சொன்னார்.

அந்தச் சமயத்தில் விராடன், ராமர் யார் என்பதை அறிந்து கொண்டு தன் தோல்வியை ஒப்புக் கொண்டான். ராமருடைய அருளினால், விராடன் சாபத்தினின்று விடுபட்டு தன்னுடைய சுயவடிவமான கந்தர்வ

உருவத்தை அடைந்தான். ராமரை, ஸரபங்க முனியின் ஆசிரமத்திற்குச் செல்லுமாறு கூறிவிட்டு தேவலோகத்திற்கு அவன் சென்றான். ராமரும் லக்ஷ்மணனும் அவனுடைய உடலைப் புதைத்து விட்டு முனி ஸரபங்கரின் ஆசிரமத்திற்கு சீதையுடன் சென்றார்கள்.

பூமியை விட்டுச் செல்லுமுன், ராமருடைய தரிசனத்திற்காக ஸரபங்கர் காத்துக் கொண்டிருந்தார். மூவரும் முனிவரை நமஸ்கரித்து அவரது ஆசிகளைப் பெற்றனர். பிறகு, முனிவர் குழு ராமரை அணுகி, அந்த வனத்தில் அரக்கர்களின் அட்டூழியங்களால் தாம் படும் துன்பங்களைப் பற்றிக் கூறியது. அந்த அரக்கர்களைக் கொன்று அவர்களைத் துன்பங்களிலிருந்து விடுவிப்பதாக ராமர் உறுதி கூறினார்.

பிறகு அவர்கள் ஸுதீக்ஷ்ணரின் ஆசிரமத்தை அடைந்து ஓர் இரவு தங்கி அவருடைய விருந்தோம்பலை ஏற்றார்கள். அச்சுறுத்தும் நிகழ்ச்சிகள் அவர்களது கானக வாழ்க்கையில் ஏற்படப் போகின்றன என்ற கலக்கத்துடன் மறுநாள் காலையில் அவர்கள் ஆசிரமத்தை விட்டுச் சென்றனர். அப்போது ஸீதை, தற்காப்பிற்கு அன்றி ஒரு பிராணியையும் கொல்லக்கூடாது, ஒருவருக்கும் தீங்கிழைக்கக் கூடாது என்ற நன்னெறியை உறுதியாகப் பின்பற்ற வேண்டுமென்று ராமருக்கு அன்புடன் எச்சரித்தாள். தான் ஒரு க்ஷத்திரிய அரசகுமாரன், உதவியின்றி வனத்திலிருக்கும் மக்களைக் காப்பது தன்னுடைய கடமை என்றும் அதனால் தான் அரக்கர்களை அந்த வனத்திலிருந்து நீக்க

வேண்டுமென்ற முடிவு எடுத்ததாகவும் அவளிடம் ராமர் கூறினார். வனத்தில் சுற்றித் திரிந்து, தொல்லை தருகிற அரக்கர்களைக் கொன்று, பல்வேறு ஆசிரமங்களில் தங்கி, பத்து வருடங்களை அவர்கள் மூவரும் மகிழ்ச்சியுடன் கழித்தனர்.

அவர்களுடைய வனவாசம் முடிவுறும் காலம் நெருங்கி வந்து கொண்டிருக்கும் போது ராமர், முனிவர் ஸுதீக்ஷணரின் ஆசிரமத்தை அடைந்து சிறிது காலம் அங்கு தங்கியிருந்தார். ஒருநாள் ராமர், தான் மிகவும் உயர்வாக கேள்விப்பட்டிருக்கும் அகஸ்திய முனிவரைப் பற்றி முனிவரிடம் கேட்டார். ஸுதீக்ஷண முனிவர், ராமருக்கு அகஸ்திய முனிவரின் ஆசிரமத்திற்கு வழிகாட்டினார். அவர்கள் செல்லும் வழியில், ராமர் அகஸ்திய முனிவரின் மகிமைகளை லக்ஷ்மணனுக்கு சொல்லிக் கொண்டே வந்தார். அகஸ்திய முனிவர் ஒருவிதமான போராட்டமும் இன்றி, பெரிய அரக்கனான வாதாபியை விழுங்கி, ஜீரணித்து அழித்துவிட்டார் என்பது போன்ற விவரங்களைக் கூறினார்.

அவர்கள் அவரது ஆசிரமத்தை அணுகியதும், அகஸ்திய முனிவர் தன் சீடரை அனுப்பி அவர்களை ஆசிரமத்திற்கு அழைத்து வரச்செய்து உபசரித்தார். ராமருக்கு மதிப்பிற்குரிய அகஸ்திய முனிவரைக் கண்டதும் ஒரு சிலிர்ப்பு உண்டாகியது. முனிவர் ராமருக்கு மஹாவிஷ்ணுவின் சிறந்த வில்லையும், அம்புகள் தீர்ந்தே போகாத இரண்டு அம்பறாத் தூணிகளையும் (அம்புக் கூடுகள்) ஒரு தெய்வீகமான வாளையும் அளித்தார். மேலும், ராமருக்கு தேவைப்படும்போது, இந்திரனுடைய

தேரோட்டி மாதலி இந்திரனின் தேரைக் கொண்டு வருவான் என்றும் அகஸ்திய முனிவர் கூறினார்.

கண்ணியம், நேர்மை, அறிவு, சகிப்புத் தன்மை, தைரியம், தியாக மனப்பான்மை ஆகிய நற்பண்பு களையுடைய ஸீதையை முனிவர் பாராட்டினார். ராமர் அவருடைய பரிசுகளை அடக்கத்துடன் பெற்றுக் கொண்டு அகஸ்தியரிடம் விடைபெற்றுக் கொண்டார். அவர்களின் எஞ்சியுள்ள வனவாச காலத்தை கோதாவரி நதிக்கரையிலுள்ள **'பஞ்சவடி'** என்னும் இடத்தில் கழிக்குமாறு முனிவர் அவர்களுக்கு அறிவுரை அளித்தார்.

அகஸ்தியரின் உத்தரவுப்படி அவர்கள் பஞ்சவடியை அடைந்தனர். பஞ்சவடியின் அழகைக் கண்டு அவர்கள் மெய் சிலிர்த்துப் போனார்கள். பூக்கள் நிறைந்த மரங்களும், எங்கும் நடனமாடும் மயில்களும், பயமில்லாமல் மலைச் சரிவுகளில் சுற்றிவரும் மான் கூட்டங்களும் அந்த இடத்தைச் சூழ்ந்திருந்தன. லக்ஷ்மணன் ஒரு சிறப்பான இடத்தைத் தேர்ந்தெடுத்து, மரத்தாலும், புல்லாலுமான அழகான குடிலை அமைத்தான். அவனுடைய வேலைப்பாட்டையும், திறமையையும் கண்டு ராமர் வியந்து பாராட்டினார். அந்த இடத்தில் அவர்களைச் சுற்றியுள்ள இயற்கையின் அழகைக்கண்டு மகிழ்ந்து, அனுபவித்து அந்தக் குடிலில் ஆனந்தமாக அவர்கள் வசித்து வந்தனர்.

ஒருநாள் அருவருப்பான வடிவத்தையுடைய ஓர் அரக்கி அவர்களது ஆசிரமத்திற்கு வந்தாள். அவள் முனி விஸ்ரவஸின் புதல்வனான ராவணன் என்ற அரக்கவேந்தனின் ஸகோதரி, சூர்ப்பணகை என்று

தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டாள். ராமரை, தான் மணக்க விரும்பும் ஆசையை வெளிப்படுத்தினாள். ராமர் வேடிக்கையாக நகைச்சுவையுடன், தான் மணமானவன் என்றும், லக்ஷ்மணன் மணமாகாதவன், மேலும் அவன் அவளுடைய அழகிற்குத் தகுந்த இணையானவன் என்றும் அவளிடம் கூறினார். லக்ஷ்மணனும் தன் ஸகோதரனின் பரிகாசத்தில் பங்கெடுத்துக் கொண்டு, தான் ராமரின் பணியாள் ஆனதால், சூர்ப்பணகை அவனை மணந்தால் ஒரு சாதாரண பணிப் பெண்ணாகத்தான் இருக்க வேண்டியிருக்கும், மேலும் ஸீதை அழகில்லாமல் இருப்பதால் ராமர் ஸீதையை விட அவளையே விரும்புவார் என்று கூறி சூர்ப்பணகையை ராமரிடமே திருப்பி அனுப்பினான்.

இவ்வாறு இங்கும் அங்கும் மீண்டும் மீண்டும் அனுப்பி வைக்கப்பட்டதால் சூர்ப்பணகை பொறுமை இழந்தாள், ராமரை மணம் புரிவதற்குத் தடையாக இருப்பது ஸீதைதான் என்பதை அறிந்து, மிகச் சீற்றத்துடன் ஸீதையை நோக்கிச் சென்றாள். வேடிக்கையான நாடகம் ஆபத்தான பாதையில் திரும்புவதைப் பார்த்து, ஸீதையின் பாதுகாப்பிற்காகக் கவலையுற்று, சூர்ப்பணகைக்கு ஒரு பாடம் கற்பிக்குமாறு லக்ஷ்மணனிடம் ராமர் குறிப்புணர்த்தினார். காலம் தாழ்த்தாமல் லக்ஷ்மணன் தன் வாளை எடுத்து அவளுடைய மூக்கு, காதுகளின் நுனியை சிறு துண்டுகளாக வெட்டி எறிந்து விட்டான்.

மிகுதியான ரத்தம் சொரிய, கோபத்துடன் தன்னுடைய ஸகோதரனான கரனிடம் அழுது கொண்டே சென்று தனக்கு ஏற்பட்ட அவமதிப்பைப் பற்றி சூர்ப்பணகை

முறையிட்டாள். உரிமையின்றி வனத்தில் இருப்பவர்களைக் கண்டு சீற்றமடைந்த கரன், தன்னுடைய ஸகோதரன் தூஷணனுடனும், 1400 அரக்கர்கள் கொண்ட சேனையுடனும் ராமருடன் போரிடச் சென்றான். ஸீதையைப் பாதுகாப்பாக ஒரு குகைக்கு அழைத்துச் சென்று அங்கு அவளுக்குக் காவல் இருக்கும்படி லக்ஷ்மணனிடம் ராமர் கூறினார். அதற்குப்பிறகு ஏற்பட்ட பெரிய சண்டையில், ராமர் தனியாக எல்லா அரக்கர்களுடனும் போரிட்டு அவர்களைக் கொன்றார். எல்லா தேவர்களும் ராமருடைய துணிவையும், வீரச் செயலையும் பாராட்டி விண்ணிலிருந்து மலர்மாரி பொழிந்தனர்.

முழு அரக்க ஸேனையுடன் தன்னுடைய சகோதர்களான கரனும் தூஷணனும் அழிந்து போனதைப் பற்றி ராவணன் மிக வேதனையுடன் கேட்டறிந்தான். உடனே தன்னுடைய தேரில் புறப்பட்டு ராமரைக் கொல்ல ஆயத்தமானான். ராவணனின் மந்திரிகளுள் ஒருவனான அகம்பனன் ராமருடன் ராவணன் சண்டையிடப் போவதைத் தடுத்து, அதற்குப் பதிலாக ராமர் உயிருக்கும் மேலாக நேசிக்கும் அவருடைய அழகான மனைவி ஸீதையைக் கவர்ந்து வரும்படியாக ராவணனுக்கு யோசனையைக் கூறினான். ராமரின் அம்புகளின் சக்தியை அறிந்த தாடகியின் புதல்வன் மாரீசன் ஆழ்ந்த விளைவுகளை அளிக்கக்கூடிய ஒழுங்கற்ற இந்தச் செயலைச் செய்யக்கூடாது என்று கூறி ராமருடைய பராக்கிரமத்தை விவரித்தான். ராமரைப் பற்றி அச்சமுறாத போதிலும் ராவணன் மாரீசனின் சொற்களை மதித்து ஸீதையைக் கவரும் யோசனையைக் கைவிட்டான்.

இதற்கிடையில், ராவணனுடைய அரண்மனையை அடைந்த சூர்ப்பணகை, தான் அனுபவித்த நிந்தனைக்கு ராமரைக் குற்றஞ்சாட்டி, அவரைத் தண்டிப்பதற்காக, ஸீதையைக் கவர்ந்து வர வேண்டுமென்று ராவணின் மனதை மாற்றினாள். ஸீதையின் அழகை விவரித்து, ஸீதையின் மேல் ராவணனுக்குக் காம உணர்ச்சி வருமாறு தூண்டி விட்டாள். ராவணன் சூர்ப்பணகையின் சொற்களை எண்ணிப்பார்த்து, ஸீதையின் அழகைப்பற்றிய ஆசை பொங்கும் வர்ணனையைத் தொடர்ந்து நினைத்து, முடிவாக என்ன விளைவானாலும் அவளை அடைவது என்று தீர்மானித்தான். மற்றொரு முறை மாரீசனிடம் ராவணன் சென்று தன்னுடைய திட்டத்தைக் கூறி மாரீசனின் உதவியைக் கோரினான். ராவணன், மாரீசனை மணிகளுடன் கூடிய கொம்புகளுடன், உடல் முழுவதும் வெள்ளிப் புள்ளிகளுடைய ஓர் அழகிய தங்க மானின் உருவெடுத்துக் கொண்டு பஞ்சவடியின் சுற்றுப்புறத்தில் உலவி வருமாறு கேட்டுக் கொண்டான். சுய அழிவைத் தரக்கூடிய திட்டத்தைத் தடுக்க முடியாத மாரீசன், ராவணனின் கையால் சாவதை விட, ராமர் கையால் சாவதே மேல் என்று தீர்மானித்து, அந்தத் திட்டத்திற்கு ஆதரவளித்தான். ராவணனுடைய ரதத்தில் ஏறி அவர்கள் இருவரும் தண்டகவனத்தை அடைந்தனர்.

எல்லாவற்றையும் மிஞ்சிய அழகுடன் கூடிய வசீகரமான மானின் உருவத்தில் மாரீசன் தன்னை மாற்றிக் கொண்டு, ஸீதையின் கவனத்தைக் கவர ஆசிரமத்தைச் சுற்றி விளையாட்டுத் தனமாகத் திரிந்தான். ஆசிரமத்திற்கு அருகில் புஷ்பங்களைச் சேகரித்துக் கொண்டிருந்த ஸீதை

அந்த மானைப் பார்த்தாள். மயக்கும் அழகுடைய அந்த மானினால் கவரப்பட்ட ஸீதை, ராமனையும் லக்ஷ்மணனையும் கூப்பிட்டு மிக அழகான அந்த மானைப் பார்க்கச் சொன்னாள். லக்ஷ்மணன் அந்த மானின் வடிவத்தின் உண்மையான தன்மையைப்பற்றி சந்தேகித்து, இது அரக்கர்களின் சூழ்ச்சியாக இருக்கவேண்டும் என்று முடிவுக்கு வந்தான். ஆனால் அந்த மானினால் ஸீதை கவரப்பட்டு, அந்த மானைப் பிடித்துக் கொண்டு வருமாறு ராமரை வேண்டிக் கொண்டாள். ராமரால் அவளுடைய வேண்டுகோளை நிராகரிக்க முடியவில்லை. லக்ஷ்மணனை ஸீதைக்குக் காவல் வைத்து விட்டு ராமர் மானைத் துரத்திச் சென்றார். அப்போது, அவர்களது வனவாழ்க்கையின் மிகத் துன்பமான பகுதியை நோக்கி விதியின் வலிய கரம் இழுத்துச் சென்றது.

மறைந்து மறைந்து ஓடி மாரீசன் ராமரை வெகுதூரம் அழைத்துச் சென்றான். அதன் மூலம் ராவணனுக்கு அவனுடைய திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அதிக அவகாசத்தையும், வாய்ப்பையும் கொடுத்தான். மானைத் தேடி அலுப்படைந்த ராமர், அடுத்த முறை அந்த மானைப் பார்க்கும்போது ஓர் அம்பை எய்ய தீர்மானித்தார். அதுபோல் அம்பெய்து மானை வீழ்த்தினார். மரணம் அடையும் போது மாரீசன் தன்னுடைய சுய உருவத்தை அடைந்து, ராமருடைய குரல் மாதிரி தன் குரலை மாற்றிக் கொண்டு, ''ஐயோ ஸீதா'', ''ஐயோ லக்ஷ்மணா'' என்று கதறினான். முதலில் மாரீசனின் இரக்கமுள்ள அழுகைக்குரலினால் ஏற்படப்போகும் துன்ப விளைவுகளை நினைத்து ராமர் அச்சமுற்றார். ஆனால்

ஆசிரமத்தில் லக்ஷ்மணன் இருப்பதால் ஸீதையைக் காப்பாற்றுவான் என்று ஆறுதல் அடைந்தார்.

ராமரின் குரலைக்கேட்டதும், ராமரின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது என்று ஸீதை கவலைப்பட ஆரம்பித் தாள். லக்ஷ்மணனிடம் ராமருக்கு உதவச் செல்லுமாறு வேண்டினாள். லக்ஷ்மணன் ஸீதைக்கு வரப்போகும் அபாயத்தை உணர்ந்து, ஸகோதரனின் கட்டளைக்குப் பணிய முடிவு செய்து, அவளைத் தனியே விட்டுச் செல்ல மறுத்தான். ஸீதையின் பயம், லக்ஷ்மணனின் மீது கோபமாக மாறியது. ஸீதை, லக்ஷ்மணனைத் தீய பண்பு உள்ளவன் என்று தாக்கிப்பேசி, அவளை மணக்க வேண்டுமென்ற ரகசிய நோக்கம் அவனுக்கு இருக்கிறது என்றும் காரணம் காட்டினாள். லக்ஷ்மணன் ராமரின் உயிரைக் காப்பாற்றப் போகவில்லை என்றால் தன் உயிரை மாய்த்துக் கொள்வதாக ஸீதை பயமுறுத்தினாள். லக்ஷ்மணன் மிகுந்த தயக்கத்துடன், மனமின்றியே ஸீதையைத் தனியே விட்டுச் சென்றான்.

அந்தச் சமயத்தில், புதர்களுக்கிடையே ஒளிந்து கொண்டிருந்த ராவணன் கண்ணுக்கு எட்டிய தொலைவு வரை லக்ஷ்மணன் இல்லை என்று தெரிந்த உடன் வெளியே வந்தான். யாசிப்பவனைப் போல், துறவற ஆடைகளைத் தரித்து, மாறு வேடத்தில் ராவணன் ஆசிரமத்தை நெருங்கினான். ஸீதை அவனை மரியாதையுடன் வரவேற்று, இருக்கை அளித்தாள். ராவணன் தான் யார் என்பதை அவளுக்குத் தெரிவித்து தன்னுடைய ராணியாக ஆகும்படி கேட்டான்.

ஸீதை அவனை உடனடியாக ஆசிரமத்தை விட்டு வெளியேறும்படிக் கூறி, அவனுடைய உயிருக்கு ஆபத்து வரும் என்று எச்சரித்தாள். பயமற்றவனும், மனந்தளராதவனுமான ராவணன் தன்னுடைய சுயரூபத்தை அடைந்து, ஸீதையைக் கையினால் தூக்கி, தன்னுடைய தேரில் வைத்தான். சில வினாடிக்குள் அந்தத் தேர் வானில் பறந்து சென்றது.

அந்த வழியில், ராமர் முன்பே வனத்தில் சந்தித்த ஜடாயு என்ற கழுகு, ராவணன் ஸீதையை கடத்திப் போவதை எதிர்த்துத் தடுத்து, அந்தத் தீய செயலை விட்டு விடும்படியாகச் செய்வதற்கு நயந்து பேசி, முயற்சி செய்தார். ராவணன் ஜடாயுவின் சொற்களை மதிக்காமல், ஜடாயுவோடு சண்டையிட்டான். ஜடாயு பாதி விழிப்பு நிலையில் நிலத்தில் விழுந்தார். ராவணனை நிந்தனை செய்து கொண்டு, அந்தப் பயணம் முழுவதும் ஸீதை அழுது புலம்பிக் கொண்டேயிருந்தாள். ராவணனின் தேர் ஒரு மலை உச்சியைக் கடக்கும் போது சில வானரங்கள் உட்கார்ந்திருப்பதைப் பார்த்தாள்; தன் ஆபரணங்களைக் கழற்றி கீழே எறிந்தாள். அந்த வானரங்கள் அவற்றைக் கண்டுபிடித்து, ராமரிடம் கொடுக்கும் என்று நம்பினாள். இலங்கை அடைந்ததும், ராவணன் அவளுக்குத் தன் அரண்மனையைச் சுற்றிக் காட்டியும் தன்னுடைய செல்வத்தையும், சக்தியை காட்டியும் அவளைக் கவரப் பார்த்தான். ஆனால் ஸீதை அவன் முகத்தை ஏறிட்டுக் கூட நோக்கவில்லை. கடைசியாக, ராவணன் பல கோரமான அரக்கிகளின் பலத்த காவலுடன் 'அசோகவனம்' என்ற சோலையில் ஸீதையைச் சிறை வைத்தான்.

தண்டகவனத்தில், மாரீசனைக் கொன்றுவிட்டு ராமர் ஆசிரமத்தை நோக்கி விரைந்த போது, வழியில் தன்னை நோக்கி ஓடி வந்து கொண்டிருக்கும் லக்ஷ்மணனைச் சந்தித்தார். ஸீதையைத் தனியாக ஆசிரமத்தில் விட்டு விட்டு வந்ததற்காக ராமர் லக்ஷ்மணன் மேல் அதிருப்தியுற்றார். அவர்கள் விரைவாக ஆசிரமத்தை வந்து அடைந்ததும் ஆசிரமம், ஸீதையில்லாமல் வெறுமையாக இருப்பதைக் கண்டார்கள். ராமர் மனமுடைந்து அழுது, ஸீதையைத் தேடிக் கொண்டு எல்லா இடங்களுக்கும் ஓடினார். ஸீதையின் பிரிவால் ஏற்பட்ட துயரம் அவரை ஆட்கொண்டது. ராமர் கதறி அழுது, உயிரற்ற பொருட்களான மரங்கள், நதிகளிடம் கூட ஸீதையை எங்கேயாவது கண்டீர்களா என்று கெஞ்சிக் கேட்டு அலைந்தார். லக்ஷ்மணன் ராமருக்கு ஆறுதலளித்து, அமைதிப்படுத்த முயற்சி செய்தான். கானகத்தில் காடு, மலை, ஆறு, குளம் என்று ஓர் இடம் விடாமல் மேலும் சென்றபோது ஜடாயுவை வழியில் சந்தித்தனர். ஜடாயு, உடலெங்கும் காயப்பட்டு, ராவணனால் சிறகுகள் வெட்டப்பட்டு நிலத்தில் குற்றுயிராய்க் கிடந்தார். ஜடாயு, ராவணனுக்கும் தனக்கும் ஏற்பட்ட போராட்டத்தையும், ராவணனிடமிருந்து தன்னால் ஸீதையை மீட்க முடியவில்லை என்பதையும் ராமரிடம் விவரமாகக் கூறினார். கண்களில் நீர்மல்க, ஸீதைக்காகத் தன் உயிரைத் துறந்த பறவையை ராமர் கட்டித் தழுவிக் கொண்டார். ஜடாயு விரைவில் உயிர் நீத்தார். ஜடாயு ஒரு ஸாதாரண பறவை மாத்திரம் அல்ல. ஆதலால் ராமர், லக்ஷ்மணன் இருவரும் அதற்கு ஈமக்கிரியைகளை கோதாவரி நதிக்கரையில் செய்தார்கள்.

வனத்தைக் கடந்து சென்று கொண்டிருக்கும்போது இரண்டு அரசகுமாரர்களும் ஒரு அசாதாரணமான கோர வடிவமுடைய அரக்கனை எதிர் கொண்டனர். வழக்கத்திற்கு மாறான மிகப்பெரிய அளவில், தலையே இல்லாமல், வாய் வயிற்றில் அமைந்ததாக, இரண்டு மிக நீண்ட கைகளுடன் அவன் இருந்தான். அவனுடைய பெயர் கபந்தன். அவன் இரண்டு அரசகுமாரர்களையும் பிடித்துக் கொண்டு தன் வாயின் அருகே கொண்டு சென்றான். அவர்கள் அவனுடைய கைகளை வெட்டிக் கீழே விழச் செய்தார்கள். ராமர் முன்னிலையில் கபந்தன் இருந்ததால் அவனுடைய சாபத்திலிருந்து விடுபட்டான், தன்னுடைய உடலைத் தகனம் செய்யுமாறு ராமரிடம் வேண்டிக் கொண்டான். அவர்கள் அவன் உடலை எரித்ததும் தன்னுடைய சுய உருவில் திரும்பி, ஸீதையைப் பற்றிய செய்தி கொடுப்பதாகவும் வாக்குறுதி அளித்தான். அவர்கள் அவன் கூறிய படியே செய்தபோது, கபந்தன் தன்னுடைய மங்கள உருவத்தில் தோன்றினான். வானரங்களின் தலைவனான ஸுக்ரீவனிடம் நட்பு கொள்ளுமாறு கபந்தன் ராமருக்கு அறிவுரை வழங்கினான். ஸீதையை மீட்பதற்கான திறனும், வழிகளும் ஸுக்ரீவனிடம் இருக்கின்றன; அவற்றால் அவன் ராமருக்கு உதவி செய்ய முடியும் என்பதை கபந்தன் அறிந்திருந்தான்.

கபந்தன் கூறியபடி, மதங்க முனிவரை அவர்கள் முதலில் பார்த்தனர். மதங்க முனிவரின் சிஷ்யை சபரி அவர்களை மிகுந்த பக்தியுடன் வரவேற்றாள். ராமருக்கு தன்னுடைய எளிய காணிக்கைகளை மரியாதையுடன் அளிப்பதற்கு வெகு காலமாக அவள் காத்திருந்தாள். அவள்

ராமருக்காகச் சேகரித்து, சேமித்து வைத்திருந்த ருசியான பழங்களை கொண்டு வந்து ஸமர்ப்பித்தாள். ராமர் அந்தப் பழங்களை மிக அன்புடன் பகிர்ந்து கொண்டு அவளிடம் விடை பெற்றார். கபந்தனுடைய சொற்களினால் சிறிது நிம்மதி அடைந்து ராமரும், லக்ஷ்மணனும் ஸுக்ரீவன் வசித்து வரும் ருஷ்யமுக மலைக்குச் செல்வதற்காக அந்த வழியில் உள்ள பம்பா நதியை நோக்கிச் சென்றனர்.

மற்ற எந்த தேசத்திலும் 'டீச்சர்' என்பதற்கும், நம் தேசத்தில் ''குரு'', ''ஆசார்யர்'' என்று சொல்வதற்கும் மதிப்பு, மரியாதைகளிலே அஜகஜாந்தரமாக இருக்கிறது. ''டீச்சர்'' என்பவன் ஈஸ்வரனே அல்லது அவன் பிரதிநிதி. அவனிடம் மாணவன் ஸர்வபரித்யாகம் செய்துவிட வேண்டும் என்ற அபிப்ராயங்கள் மற்ற தேசத்தவர்களுக்கு அடியோடு தெரியாது, ஏதோ அவன் கெட்டிக்காரன். அநேக விஷயங்கள் தெரிந்து கொண்டிருக்கிறான். தெரிந்து கொண்டதோடு அதைப் பிறருக்கும் அழகாகச் சொல்லிக் கொடுக்கத் திறமை பெற்றிருக்கிறார். என்பதோடு நிறுத்திக் கொண்டார்கள். டீச்சராக இருக்கப்பட்டவனும் தன்னை அப்படித்தான் நினைத்துக் கொண்டு அந்த மாதிரி தன்னை வளர்த்துக் கொள்வதோடு நின்றுவிட்டான். நம் தேசத்திலோ பொருளுக்காக வித்யோபதேசமில்லை என்பதிலிருந்து ஆசார்யனாகப் பட்டவன் ரொம்பவும் தூய வாழ்வு வாழ்ந்து ஆத்மானுபவியாகவே இருக்கவேண்டும் என்ற அளவுக்கு அவனுடைய யோக்யதாம்சம் ரொம்பவும் உச்சத்துக்குப் போய்விட்டது.

9. மந்திரங் கற்போம்

ப்ராதஸ்மரணம்

வைகறை வணக்கம்

ஸநத்குமார: ஸநக: ஸநந்தன: ஸநாதநோப்யாஸுரிபிங்கலௌச |
ஸப்த ஸ்வரா: ஸப்த ரஸாத லாநி குர்வந்து ஸர்வே மமஸுப்ரபாதம் ||

பொருள்:

ஸநத்குமாரர், ஸநகர், ஸநந்தர், ஸநாதநர் ஆகிய இந்நால்வரும் ஆஸுரி, பிங்களர் இவர்களும், எங்கும் பரவியுள்ள ஏழு குரல் ஒலிகளும் ஏழு கீழுலகங்களும் என் காலைப் பொழுதினை மங்களமயமாக ஆக்கட்டும்.

1. **ஸநகர், ஸநந்தனர், ஸநத்குமாரர், ஸநத்ஸுஜாதர் (ஸநாதநர்)** நால்வரும் ப்ரம்மாவின் மானஸ புத்திரர்கள். இவர்கள் நால்வரும் வைகுந்தம் சென்றபோது விஷ்ணுவைத் தரிசிக்க முடியாமல் வாயில் காப்பாளர்களாகிய ஜய, விஜய என்ற இருவரால் தடுக்கப்பட்டனர். அதன் காரணமாக, நால்வரால் இருவரும் சபிக்கப்பெற்று ஹிரண்யாக்ஷன், ஹிரண்யகசிபு, ராவணன், கும்பகர்ணன், சிசுபாலன், தந்தவக்ரன் என முறையே அரக்கர்களாகப் பிறந்து விஷ்ணுவின் பதம் சேர்ந்தனர்.

ஸநத்குமாரர் நாரதருக்கு ஆத்மவித்தையை உபதேசித்தார்.

ஸநத்ஸுஜாதர் கௌரவர்களின் தந்தை திருதராஷ்டிர னுக்கு ஆத்மபோதம் கற்பித்தார் என்றும் திருமாலுடன் துணைவராக இருந்தார் ஸநகர் என்றும் கபிலருக்கும் முன்னால் ஸநாதனர் ஸாங்க்ய தத்துவத்தின் ஆசிரியராக இருந்தார் என்றும் சொல்லப்படுகிறது.

2. **ஆஸுரி:** ஷட் தர்சனங்களில் ஸாங்க்யம் ஒன்று. இதிஹாசங்களிலும் புராணங்களிலும் ஸாங்க்ய தர்சனக் கருத்துக்கள் விரவி கிடப்பதைக் காண்கிறோம். ஸாங்க்ய தத்துவத்தின் ஆசிரியர் கபிலர் ஆவர். அவரின் தலைமைச் சீடர்தான் ஆஸுரி. இவரின் சீடர் **பஞ்ச சிகா** என்பவர் ஆவர். ஸாங்க்ய தத்துவத்தைப் பற்றிய விளக்கத்தைத் தந்தவர் என்ற முறையில் இவர் (ஆஸுரி) பெயர் துதிக்கப்படுகிறது.

3. **பிங்களர்:** ஷடங்கங்களில் ஒன்று சந்தஸ். 'சந்தஸ்' என்பது யாப்பிலக்கணம் ஆகும். வேத பாக்களின் சந்தஸ்ஸுகள் பற்றிய இலக்கணத்தைப் பற்றிய விரிவுரை அமைத்தவரே பிங்களர் ஆவார். **'சந்தஸ் ஸூத்திரங்கள்'** என்ற எட்டு அத்யாயங்களையுடைய இவரது நூல் பலவித யாப்புகளைச் சொல்கிறது. **'காயத்ரி'** என்பதும் ஒரு சந்தஸ்ஸே (யாப்பே) பிற்கால காவியங்கள் யாவும் வேத அங்கமான சந்தஸ்ஸை அடிப்படையாகக் கொண்டே பிறந்தன. அதற்கு முக்கியக் காரணமானவர்தான் பிங்களர்.

4. **ஏழு ஸ்வரங்கள்:** ஒரு பாடல் என்பது ராகத்தையும், தாள லயத்தையும் அடிப்படையாகக் கொண்டது. ராகத்தின் அடிப்படையான ஸ்வரம், கேட்பவர்களின் மனதை உவகைப்படுத்தும் எதிரொலிப்புடன் கூடிய ஒலி என்று விவரிக்கப்படுகிறது.

எதிரொலிப்பை இயல்பாகக் கொண்டதும், கேட்பவர்களின் மனதை உவகைப்படுத்துவதுமான ஒலி **ஸ்வரம்** என்று அழைக்கப்படுகிறது.

மொத்தமாக ஏழு (7) ஸ்வரங்கள் இருக்கின்றன.

1. ஷட்ஜம் (ஸ) - மயில் அகவுதல் ஒலி
2. ரிஷபம் (ரி) - பசுக்கள் கத்தும் ஒலி
3. காந்தாரம் (க) - ஆடுகள் கனைக்கும் ஒலி
4. மத்யமம் (ம) - க்ரௌஞ்சம் என்னும் வளை மூக்குள்ள பறவையின் ஒலி
5. பஞ்சமம் (ப) - குயில்களின் கூவும் ஒலி
6. தைவதம் (த) - குதிரைகள் கனைக்கும் ஒலி
7. நிஷாதம் (நி) - யானையின் பிளிறல் ஒலி

- இந்த ஏழு ஸ்வரங்கள்.

ஏழு இயற்கையான ஸ்வரங்களும் வேத உச்சாடன ஸ்வரங்களான உதாத்தம், அநுதாத்தம், ஸ்வரிதம் என்ற மூன்றைப் பின்பற்றி வந்துள்ளன. உதாத்தத்தில் நிஷாதமும் (நி) காந்தாரமும் (க) உள்ளன. அநுதாத்தத்தில் ரிஷபமும் (ரி) தைவதமும் (த) அடங்கியுள்ளன. ஸ்வரிதத்திலிருந்து ஷட்ஜமும் (ஸ) மத்யமமும் (ம) பஞ்சமமும் (ப) பிறந்துள்ளன.

5. ஏழு கீழுலகங்கள்: 1) அதல 2) விதல 3) ஸுதல 4) தராதல 5) ரஸாதல 6) மஹாதல 7) பாதாளம் எனப் புராணங்களில் முறையே விவரிக்கப்பட்டுள்ளன.

(இன்றும் கூட நம் அரசாங்கம் **'பாதாளச் சாக்கடை திட்டம்'** என்பதை ஹிந்து தர்ம அடிப்படையிலேயே **செக்யூலர்** என்று சொல்லிக் கொண்டாலும் பெயர் வைத்திருப்பதைப் பார்க்கமுடிகிறது.)

- மேற்கூறப்பட்டவைகளை நினைப்பதன் மூலம் அவையாவும் என் காலைப் பொழுதை மங்களகரமானதாக ஆக்கட்டும்.

ஒருவரைப் பெரியவராக நினைப்பதில் ஐந்துவிதம் இருக்கிறது. தனத்தை வைத்துப் பெரியவராகச் சிலரை மதிக்கிறோம். பெரிய ப்ரபு என்றால் உடனே ஒரு மரியாதை தோன்றிவிடுகிறதல்லவா? இது ஒன்று.

வயஸில் சின்னவர்களாயிருந்தாலும் மதனி, மாமா முறை, சித்தப்பா முறை ஆகிறவர்களென்று பந்துத்வத்தில் உள்ள ஸ்தானத்தினால் சிலரைப் பெரியவர்களாக மதிப்பது இரண்டு.

ரொம்ப வயஸானவரென்றால் யாராயிருந்தாலும் 'பெரியவர்' என்று மரியாதை பண்ணுவது மூன்று.

நாலாவதாக, மஹாயஜ்ஞங்களைச் செய்தவர். பெரிய அநுஷ்டாதா என்றால் வயஸைப் பார்க்காமலே பெருமைப்படுத்துவது.

ஐந்தாவதாக வித்யையிலே சிறந்த மஹா வித்வான் என்பதால் மரியாதை செய்வது.

இதை தர்ம சாஸ்த்ரத்தில் சொல்லி இப்படி ஒன்று, இரண்டு, மூன்று போட்டதில் முதலில் வருவதைவிட அடுத்து வருவதே உசந்தது என்று கூறியிருக்கிறது - அதாவது ஐந்தாவதாக, வித்யையை வைத்து ஒருத்தரைப் பெரியவராகக் கருதி கௌரவிப்பதுதான் எல்லாவற்றிலும் உத்தமமானது என்று சொல்லியிருக்கிறது.

10. கேள்வி ஞானம்

1. ஓம் என்பதிலுள்ள அக்ஷரங்கள் யாவை?
2. மனதிற்கு அதிபதி யார்?
3. ஆன்மாவின் மூன்று நிலைகள் என்ன?
4. வேதத்திற்கு மற்றொரு பெயர் என்ன?
5. 'அஹல்யா' என்பதன் பொருள் என்ன?
6. 'அவமா' என்றால் என்ன?
7. 'தூர்வா' என்றால் எதைக் குறிக்கும்?
8. தெய்வத்தின் படங்களுக்கோ, சிலைகளுக்கோ, எந்த விரலால் சந்தனம் குங்குமம் இடக் கூடாது?
9. உறவினர்களை வழியனுப்பி விட்டு வந்து என்ன செய்யக்கூடாது?
10. சண்டிகா தேவீ என்று அழைக்கப்படும் தெய்வம் யார்?

விடைகள்:-

1. அ, உ, ம
2. சந்திரன்
3. விழிப்பு, கனவு, உறக்கம்
4. அபௌருஷேயம்
5. அவலக்ஷணமின்றி அனைத்து லக்ஷணங்களும் நிறைந்தவர் எனப் பொருள்.

6. மூன்று திதிகள் ஒரே நாளில் சேரும் நாள் அவமா.

7. அருஹம்புல்.

8. கட்டை விரலுக்கடுத்த ஆள் காட்டி விரலால்.

9. குளிக்கக் கூடாது.

10. துர்கை, லக்ஷ்மீ, ஸரஸ்வதி மூவரும் ஒன்று சேர்ந்த உருவமே சண்டிகா தேவீ.

''பக்தி என்ற மனோபாவத்தை நாம் அடைய வேண்டும் என்றால் அதற்கு அடிப்படையாக நம் மனம் பக்குவம் ஆக வேண்டும். பக்தி என்பதும் மனப்பக்குவம் என்பதும் ஒன்றே என்று சொல்லலாம். மனப்பக்குவம் என்பது யாருக்கு ஏற்படுகிறதோ அவருக்கு சுயமாகவே இந்த பக்தி உணர்வு ஏற்படும், இதற்குத்தான் குரு அருள் தேவை''

கசடறக் கற்றபின் அதற்குத் தக்கபடி ஒருத்தன் வாழ்க்கை நடந்த வேண்டும் - 'நிற்க அதற்குத்தக' என்று திருவள்ளுவர் சொன்னார். இப்படி, தான் கற்று, கற்றவழி நிற்பதோடு பிறருக்கும் கற்பித்து, கற்பிப்பதோடு விடாமல் அவர்களுக்கும் கற்றவழி நிற்க பயிற்சி செய்கிறவன்தான் ஆசார்யன். அப்படி அநேகர் இருந்து வந்திருப்பதுதான் நமக்குப் பெருமையிலெல்லாம் பெரிய பெருமை.

குறிப்புகளையும் கேள்விகளையும் இங்கே எழுதுங்கள்

'ஹிந்து தர்ம ஞானம்' பாடத்திட்டத்திற்கு துணைநிற்கும் நூல்கள்

1. வேத பாரம்பர்ய கல்வித் திட்டம் தொகுப்பு - 1, 2, 3 பூஜ்ய ஸ்ரீ தயாநந்த ஸரஸ்வதி ஸ்வாமிகளின் ஆர்ஷ வித்யா குருகுலம் அருளாசியுடன் ஸ்வாமிணி ப்ரமாநந்த
2. 'தெய்வத்தின் குரல்' பூஜ்ய ஸ்ரீ சந்த்ரசேகரேந்திர ஸ்வாமிகள் (காஞ்சி மஹா பெரியவர்கள்)
3. சிருங்கேரி மஹாஸ்வாமிகள் உரைத் தொகுப்பு.
4. ஸ்ரீ குருஜியின் 'சிந்தனை களஞ்சியம்'
5. கடவுளின் வடிவங்கள் - பூஜ்ய ஸ்ரீ ஸ்வாமி சித்பவாநந்தர்.
6. சந்தேகம் தெளிதல் - பூஜ்ய ஸ்ரீ ஸ்வாமி சித்பவாநந்தர்.
7. ராமாயணம் - பூஜ்ய ஸ்ரீ ஸ்வாமி சித்பவாநந்தர்.
8. மஹாபாரதம் - பூஜ்ய ஸ்ரீ ஸ்வாமி சித்பவாநந்தர்.
9. ஆன்மிக வினா-விடை - ஸ்வாமி கமலாத்மானந்தா - ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்
10. திருக்குறள் கடவுள் வாழ்த்து - ஸ்ரீ ஸ்வாமி ஓங்காராநந்த
11. தர்மத்தின் குரல் - பூஜ்யஸ்ரீ பரமாநந்த பாரதி ஸ்வாமிகள்
12. இந்து மதத்தின் மையக் கருத்து - ஸ்வாமி பாஸ்கரானந்தர்
13. 'மதுர முரளி' - ஸ்ரீஸ்ரீ முரளிதர ஸ்வாமிகளின் உபன்யாஸ தொகுப்புகள்

14. 'ஹிந்து மஹா சமுத்திரம்' - சோ
15. சிறுவர் சிவஞானம் - கோவைகிழார்
16. ஹிந்து விழாக்களும் விரதங்களும் - ஆர்.பி.வி.எஸ். மணியன்
17. புண்ணியபூமி பாரதம் - ஆர்.பி.வி.எஸ். மணியன்
18. பாரதப் பண்பாடு - கேந்திரத் தொண்டர் 'அண்ணாஜி' விவேகானந்த கேந்திர வெளியீடு
19. வேதமும் பண்பாடும் - ஸ்ரீ சர்மா சாஸ்திரிகள்
20. பாரதீய பண்பாட்டுப் பாடநூல் - வித்யா பாரதி வெளியீடு (9 புத்தகங்கள்)
21. 'ஸந்தேஹ நிவாரணீ' - வைதிகஸ்ரீ நன்னிலம் ப்ரம்மஸ்ரீ ராஜகோபால கனபாடிகள் (பாகம் 1-5 வரை)
22. இந்தியக் கலாச்சாரத்தில் ஏன்... எதற்காக? - சென்ட்ரல் சின்மயா மிஷன் - ஸ்வாமிநீ விமலானந்த, ராதிகா கிருஷ்ணகுமார்)
23. ஹிந்து தர்ம வாழ்க்கையும் தத்துவங்களும் - ஸ்வாமி - அநுராகம் பதிப்பகம்
24. அர்த்தமுள்ள ஸம்ப்ரதாயங்கள் - அருண்ஜி
25. மனோமயகோசம்- ஸ்ரீ ராம கோபாலரத்னம்
26. ஹிந்து சமயம் (ஐந்து நிலைகளும்) - பூஜ்ய ஸ்ரீ ஸ்வாமி மதுரானந்தர். வெள்ளிமலை ஆஸ்ரமம், கன்னியாகுமரி.

ஹிந்து தர்ம ஞானம்

விடைகளைத் தனித்தாளில் எழுதி, புத்தகம் கிடைத்த 15 தினங்களுக்குள் கல்வி மையத்திற்கு அனுப்பி வைக்கவும். விடைத்தாள் கிடைத்த பிறகே அடுத்த மாதத்திற்கான புத்தகம் அனுப்பி வைக்கப்படும்.

பயிற்சி வினா - விடைத் தாள்

தொகுப்பு 4

அ. கோடிட்ட இடத்தைப் பூர்த்தி செய்க:

1. **'நான் கண்டுகொண்டேன் நாராயணா என்னும் நாமம்'** மொழிந்தவர் ----------------.

2. க்ருஷ்ண த்வைபாயனர் தான் ---------------- என்று அழைக்கப்படுகிறார்.

3. சாதுர்மாஸ்யம் என்பது ---------------------------------- முதல் -- வரையில் கட்டுப்பாடுகளுடன் இருப்பதே ஆகும்.

4. பொருள் சேமிப்பு ---------------- செய்வதற்கே.

5. திதிகள் மொத்தம் ---------------- ஆகும்.

6. க்ருஷ்ண யஜூர் வேதத்தில் மொத்தம் ----------------- ஶாகைகள் என்று விஷ்ணு புராணம் சொல்கிறது.

7. ஸாம வேதம் ----------------- முனிவருக்கு வ்யாஸரால் கொடுக்கப்பெற்றது.

8. நம் நாட்டில் பொதுவாக ----------- லக்ஷியம் ஆகும்.

9. ஸநாதந தர்மம் மறுபிறப்புக் கொள்கையும், ---------------- என்ற இரண்டு தத்துவங்களின் அடிப்படையில் அமைந்திருக்கின்றது.

ஆ. ஓரிரு வரிகளில் விடை தருக:

1. மறுபிறப்புக் கொள்கைக்கு ஏதுவாக உள்ள ஏதேனும் ஒரு திருக்குறளை எழுதுக.

---

2. ஆரண்யகத்தின் (வேதத்தின்) கடைசிப்பகுதி என்னவென்று அழைக்கப்படுகிறது?

---

3. பாரதீய பண்பாட்டின் தாரக மந்திரம் என்ன?

---

4. ஒரு திதிக்கு உள்ள பாகை (Degree) எத்தனை?

---

5. வ்யாஸரின் கொள்ளு தாத்தாவின் பெயர் என்ன?

இ. பொருத்துக. விடைகள்

(முதல் பத்திக்குச் சரியான விடையின் தமிழ் எழுத்தை பெட்டியில் எழுதுக)

1. விஷ்ணு புராணம்	அ. இந்திரன்	☐
2. காது	ஆ. ஸாம வேதம்	☐
3. ஶந்தஸ் ஸூத்ரங்கள்	இ. அறிகருவி	☐
4. நீரின் தேவன்	ஈ. பராசரர்	☐

5. மழையின் தேவர்	உ.	க்ருஷ்ண யஜுர்வேதம்	☐
6. ஸாந்தோக்ய உபநிஷதம்	ஊ.	ஐந்தாவது வேதம்	☐
7. கட உபநிஷதம்	எ.	வ்யாஸரின் தாயார்	☐
8. மஹாபாரதம்	ஏ.	பிங்களர்	☐
9. ஸத்யவதி	ஐ.	வழிபடுதல்	☐
10. யஜ்	ஒ.	வருணன்	☐

ஈ. ஒப்படைவு (Assignment)

1. மறுபிறப்புக் கொள்கைக்கு எடுத்துக்காட்டாக நம் தமிழ் இலக்கியங்களிலிருந்தும் பிற நூல்களி லிருந்தும் தொகுத்து வைக்கவும்.

தர்ம ரக்ஷண ஸமிதியின் ஆன்மிகத் தொண்டுப் பணிகள்

1. ஸ்ரீ ஸரஸ்வதி நாம ஜப வேள்வி
2. ஸ்ரீ ஐயப்ப சங்கமம்
3. அம்மன் யாத்திரை
4. ஸ்ரீ இராமாயண ஞான வேள்வி
5. கோவில் கொண்ட தமிழகம்
6. ஹிந்து தர்ம பிரச்சார யாத்திரை
7. ஆன்மிகப் பயிற்சி முகாம்
8. அறநெறி வகுப்பு

கிராமந்தோறும்

வாரம் ஒருநாள் சமய வகுப்பு
வாரம் ஒருநாள் பஜனை, கூட்டு வழிபாடு
மாதம்தோறும் திருவிளக்கு பூஜை
மாதம்தோறும் சமயச் சொற்பொழிவு

குலதெய்வம், கிராம தெய்வம், இஷ்ட தெய்வம், தாய் தந்தை, மூதாதையர் வழிபாடு போன்றவற்றை ஊக்குவிக்க பிரச்சாரம் செய்தல்

ஆன்மிகத்தில் பொதுமக்களை ஈடுபடச் செய்தல்

– போன்ற சமயப் பணிகளை தர்ம ரக்ஷண ஸமிதியில் இணைந்து தொண்டாற்றி இறைவனின் திருவருளுக்குப் பாத்திரமாக அன்புடன் அழைக்கின்றோம்.

முகவரி

பாரதீய அறநெறிப் பண்பாட்டுக் கல்வி மையம்
சுத்தானந்த ஆச்ரமம்
38, கிரிவலப் பாதை, அடி அண்ணாமலை,
திருவண்ணாமலை–606 604.
செல்லிடைப்பேசி: 9500082794
தொலைபேசி: 04175-232153.
மின்னஞ்சல்: **cbdcstn@gmail.com**

தர்ம ரக்ஷண ஸமிதி

அறத்தினூங்கு ஆக்கமும் இல்லை

தர்ம ரக்ஷண ஸமிதிக்காக
எல்கேஎம் கம்ப்யூட்டர் பிரிண்டர்ஸ் மூலம்
அச்சிட்டு வெளியிடுவோர்
K. பிரபாகர்,
64, போலீஸ் கமிஷனர் ஆபீஸ் ரோடு,
எழும்பூர், சென்னை - 600 008.
போன் : 044-2819 2438